# சித்திரலேகை கதை

சென்னைப் பல்கலைக் கழகம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு.


பதிப்பு:
**மு. சண்முகம்**

நெறியாளர்:
முனைவர் **ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம், சென்னை - 600 005.



தமிழிலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

# சித்திரலேகை கதை

**சென்னைப் பல்கலைக் கழகம்**
**சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக**
**அளிக்கப்பெறும் பதிப்பேடு.**


பதிப்பு:
**மு. சண்முகம்**

நெறியாளர்:
முனைவர் **ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம், சென்னை - 600 005



**தமிழிலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம்**
**சென்னை - 600 005.**
**மே 2003 - 2004.**

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயப் பதிப்பிற்காக
அளிக்கப்பட்ட பதிப்பு
வரிசை எண்.

**முனைவர் ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம்,
சென்னை - 600 005.

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத்துறையின் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக **செல்வன் மு. சண்முகம்** அவர்கள் **சித்திரலேகை கதை** என்னும் கருகோளில் அமைந்த தாள் சுவடியை எனது மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இப் பதிப்பு இவரது சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள் :

**ய. மணிகண்டன்**
(நெறியாளர்)

**மு. சண்முகம்,**
முதுகலை,
தமிழ் மொழித்துறை ,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005.

## பதிப்பு மாணவர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறையின் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக **செல்வன் மு. சண்முகம்** ஆகி ய நான் **சித்திரலேகை கதை** என்னும் பொருண்மையில் அமைந்த தாள் சுவடியை **ய. மணிகண்டன்** ஐயா அவர்களின் மேற்பார்வையில் ப திப்பு செய்துள்ளேன் என்றும் இப்பதிப்பு என் சுய முயற்சியால் விளைந்தது என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள் :

**(மு. சண்முகம்)**
பதிப்பு மாணவர்

# நன்றியுரை

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னோர் தன்யாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

- தண்டி -

என்னுள் கொஞ்சம் குடிகொண்டிருக்கும்

கன்னித் தமிழுக்கு நன்றி.

இத் (சுவடியில்) துறையைத் தொட்டுப் பார்க்க

வாய்ப்பளித்த

சென்னைப் பல்கலை தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் வீ. அரசு அவர்களுக்கு என் முதற்கண் நன்றி.

இந்நாடகத்திற்கு(அ) இப்பதிப்புக்கு மேற்பார்வையாளராக இருந்த ய. மணிகண்டன் ஐயா அவர்களுக்கு நன்றி. தமிழ் இலக்கியத்துறைக்கு நன்றி.

இதன் மூலமாக பல உதவிகள் செய்த **கி. ஜெயக்குமார் அவர்களுக்கும், ப.வெ. நாகராசன்** அவர்களுக்கும், **மு.கோ. இராமன்** அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கற்பித்த பேராசிரியர் பெருமகனார்களுக்கு நன்றி.

இந்தச் சுவடியை கொடுத்துதவிய

அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகர்களுக்கு நன்றி...

இதனை அச்சிட்டு வடிவமைத்த

அன்றில் பதிப்பகத்தார்க்கு நன்றி...

என்னினும் மேலான என் நண்பர்களுக்கும்.

- நன்றி -

**(மு. சண்முகம்)**

## பதிப்புரை

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தக் குடி " எனும் சிறப்பினைப் பெற்ற நமது பைந்தமிழை, அக்கால மக்கள் தம் மனக்கருத்துகளை கல்வெட்டிலும், பனையோலையிலும், துணியிலும் (சீனாவில்) எழுதினர்.

பின்னர்,

தொழிற்புரட்சியின் விளைவால் விளைந்த மாற்றத் தின் காரணமாக தாள்களும் அச்சுக் கூடமும் வந்தது. பிறகு பனையோலை, கல்வெட்டுகள், சாசனங்களில் உள்ள வற்றை நிலைபெறச் செய்யும்பொருட்டு தாளில் அரங் கேற்றம் செய்ய அவ்வெழுத்துகள் மீண்டும் உயிர்பெற்றன.

காலின் மெக்கன்சி, சி.வை.தா., உ.வே.சா., வ.உ.சி., எஸ்.வை., பின்னத்தூரார், இராகவையங்கார் இன்ன பிறரால் இவ்வேடுகள் அச்சில் புத்தொளிவீசத் தொடங்கி யதின் காரணமாகவே இன்றுள்ள தமிழ் நிலைத் துள்ள தென்றால் அது மிகையாகாது.

ஐயரவர்களின் அறுபடாத தமிழ் நெறியில் எவ்வ ளவோ (100) நூல்களை அச்சில் கொண்டு வந்தவர். அதனால் "தமிழ்த் தாத்தா" என்றழைக்கப்படுபவர். இவரின் பெரும்பணி குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கித்துறை பட்டய பேற்றிற்காக "சித்திரலேகைக் கதை "என்னும் நாடகம் சென்னை அரசு கீழ்த்திசைச் சுவடியிலிருந்து எடுக்கப்பட்டது. எண் - R. 1791.

**நாடகம் :-**

உண்மையில் இலக்கியம், இசை, நடனம் ஆகிய மூன்றும் இணைந்து கண்ணுக்கும், காதுக்கும் மனத்துக்கும் விருந்தளிக்கும் ஒரு அமைப்பே "நாடகம்" என்று கூறலாம்.

மனிதனது இன்ப வாழ்வைச் சிறப்பாக விளக்க முற் படுவது நாடக வழக்காகும்.

**மரப்பாவைக் கூத்து - பொம்மலாட்டம் - தோற்பாவை -நிழற்பாவை - நாட்டியம் - நாட்டிய நாடகம் = நாடகம் என்ற நிலையில் வளர்ந்துள்ளதாக தி.க. சண்முகம் கூறுகிறார்.**

ஏனைய இலக்கியங்களின் காலத்தைப்போலவே இதனுடைய காலத்தையும் கணிக்க முடியாதொன்றே.

இருந்தாலும் இறைவனைப் பற்றியே (அ.து) புராணக் கதைகளிலிருந்தே நாடகம் தோன்றியிருக்கும் என்பதை மனிதில்கொண்டு சற்று யூகிக்கலாம்.

**முதல் நாடகம் :-**

அப்படி முதன்முதலில் பரதர் 'இலக்குமி சுயம்வரம்' என்ற நாடகத்தை எழுதியதாக "மச்சபுராணம்" கூறுகிறது. இது இந்திரன் முன் நடிப்பதற்குரிய, நான்முகன் பரதனை அழைத்து எழுதச்சொன்னதாக கதை உள்ளது. இதெல்லாம் கற்பனையாகத் தோன்றுகிறது என்கிறார் ஏ.என். பெருமாள்.

சைகையும், பாடலும் இணைந்த புனிதமான நடனத்திலிருந்து நாடகத்தின் தோற்றுவாய் அமைவதாக "ஒல்டன்பர்க்" கூறுகிறார்.

**நாடகத்தின் சூழல் :**

மனிதன் ஓரளவு சிக்கலிலிருந்து விடுபட்டக் காலத்தின்போது அப்போது அங்கே ஏதோ ஒரு முறையில்

நாடக அரங்கம் இருந்திருக்க வேண்டும் என்கிறார் 'செல்டன் சேனே'. போலச் செய்தல் மனித இயற்கையின் முக்கியமான கூறுகளில் ஒன்று. போலச் செய்தல் என்பது உணர்ந்து பதிவெடுத்தலாகும் என்று உளவியல் வல்லுநர் "ஜங்" கூறுகிறார். அது அறிவு பூர்வமானதும், பழமை யானதும் என்று "அரிஸ்டாடில்" கூறுகிறார்.

இத்தகைய மனித இயற்கையிலிருந்தே நாடகத்தின் தோற்றம் அமைந்திருக்கலாம் என்பது பலரின் கருத்தாகும்.

நாடகத்தின் தோற்றுவாய் ரிக்வேதத்திலும் பிரதி பலிக்கிறது.

## சமய இலக்கிய நாடகங்கள்

நாடக இலக்கியக் கலையின் வளர்ச்சியைப் பற்றிச் சிந்திப்பவர்கள் இன்பியலின் தொடக்கத்தை கி.பி. 486-ல் வழங்கப்படும். 'டயோனிசியல்' விழாவோடு தொடர்புப் படுத்திக் கூறுவதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் இது களியாட்டங்கள், விழாக்கள் மூலம் வளர்ந்து வந்திருக்க வேண்டும் என்பர்.

இந்தக் கடவுளை பெருமைப்படுத்தும் 'டயோனிசியஸ்' என்பதிலிருந்தும், "பாக்கஸ் அப்பல்லோ டிமிட்டர்" என்ற கிரேக்க நாடகத்தின் அடித்தளமாக அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

'ஒசாரிஸ்' வணக்கத்திலிருந்து எகிப்து நாடகம் தொடங்கப்பட்டதாகத் தெரிகிறது. எரிமலையை அடங்கச் செய்யும் நோக்குடன் ஜப்பான் நாட்டினர் ஆடிப்பாடும் "சாம்பஸோ" நடனத்திலிருந்து அ;நத நாட்டு நாடகம் தோன்றியதாகத் தெரிகிறது.

மகமது, பாத்தினா, ஆலி இவர்களின் சாவை நினைந்து ஒப்பாரிப்பாட்டிலிருந்தே முகமதியரின் நாடகங்கள் தோன்றுகிறது.

கிருத்துவ நாடகங்கள் இறையாற்றலின் வியப்புறுச் செயல்களை நடிப்பதிலிருந்து தோன்றுவதாகத் தெரிகிறது.

இவையெல்லாம் காணும்போது சமயங்களின் துணையே நாடகத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஆதாரமாகவும், துணையாகவும் அமைந்துள்ளன என்பது புலனாகும்.

**தமிழ் நாடகத்தின் தோற்றுவாய் :**

முத்தமிழ் என அழைக்கும் வழக்கு "பரிபாடல் திரட்டு" என்பதின் மூலம் வெளியாகிறது. கி.மு. 3-ம் நூற்றாண்டிலேயே தமிழ் நாடகம் சிறப்புற்றிருந்தாக வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி அவர்களின் "நாடகவியல்" முன்னுரையில் கூறுகிறார். கி. சுப்பிரமணிய பிள்ளையார் இதேக் கருத்தினையுடையவர்.

அகத்தியத்தில் ஒரு பகுதி தமிழ் நாடகம் பற்றி பேசுகிறது என்கிறார்கள்.

எஸ். வையாரிப்பிள்ளை - 5-ம் நூற்றாண்டின் நாடகத்தின் தோற்றம் என்றாலும், தொல்காப்பியரின்

"நாடக வழக்கினும் புலநெறி வழக்கினும்" என்பதின் மூலம் தொல்காப்பியர் முந்தியது என்று ஒப்புக்கொண் டுள்ளார்.

**நாடகம் - சொற்பொருள் :**

நடம் = நடனம் = நாடகம்

நடனம் என்பது அசைதல். 'நட்டு' என்ற அடிச்சொல்லி லிருந்து தோன்றியிருக்கலாம். முன்காலத்தில் நாடகம் என்பது கூத்து என்று வழக்கு.

அடியார்க்கு நல்லார் - கூத்து

(1) அவிநயம்

(குறிப்பிட்ட பாடலுக்கு உடலசைவு செய்து ஆடும் நடனம்)

(2) நாடகம் (கதைத்தழுவிய பாடலுக்கு (அ) ஒரு விரிவுரைக்கோ தக்கவாறு ஆடுதல்.

திவாகரம் - நடமே நாடகம்.

கதையை இசைக்கருவி, துணையுடன் ஆடிக்காட்டும் நடனமாகும் என்பது மறைமலையடிகளின் கருத்து.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் - நிலா முற்றத்தில் நடக்கும் நடனத்தை நாடகம் என்கிறார்.

கலிங்கத்துப் பரணி - கூத்து

பாரதிதாசன் - நடனம்

**கூத்து வகைகள் :**

*வெறிக்கூத்து (முருகனுக்கு)

*துணங்கைக்கூத்து (ஒரு பெண் தனது வீரம் விளங்க முழங்கைகளால் தனது இடுப்பை அடித்தபடியே ஆடும் ஆட்டம்)

*வள்ளிக்கூத்து (வள்ளியைப் புகழ்ந்து பாடுதல் - தொல்காப்பியம்)

*கயிற்றாடல் (உயரமான கழியில் கயிற்றைக்கட்டி

அதில் நின்று தாளத்திக்கேற்றவாறு
ஆடுவது.)

| | |
|---|---|
| *போர் நடனக் கூத்து | *கழிநடம் & கழாய்கூத்து, |
| *வேட்டுவவரிக்கூத்து | *நோக்கு, |
| *சாக்கைக் கூத்து | *தோற்பாவைக்கூத்து, |
| | *விதூடகக் கூத்து, |
| | *வசைக் கூத்து, |

*விநோதக்கூத்து

*அல்லியக் கூத்து

*குடையாடல் கூத்து

*பாவையாடல் கூத்து போன்ற பல.

**சில நாடக நூல்கள் :**

| | |
|---|---|
| அரிச்சந்திர நாடகம் | நொண்டி நாடகம் |
| கள்ள நாடகம் | மதியுலா நாடகம் |
| ஆதிமூலம் நொண்டி நாடகம் | முக்கட்டுப் பள்ளு நாடகம் |
| *நொண்டி நாடகம் | |
| *குசலவ நாடகம் | *சாளுவாரயன் நொண்டி நாடகம் |
| *சாரங்கதார நாடகம் | *நீலி நாடகம் |
| *தேரூர்ந்த நாடகம் | *பழனி நொண்டி நாடகம் |
| *பழனிப்பள்ளு நாடகம் | *மதிகெட்டான் நாடகம் |
| | *மார்க்கண்ட நாடகம் |

இப்படிப் பலப்பல,

**நாடக வீழ்ச்சி :**

அப்போது களப்பிரர்கள் நாட்டை ஆண்ட போது அவர்கள் நாடகத்தை அறவே வெறுத்தனர். இவர்களைப் போலவே சமண, பௌத்தர்களும் வெறுத்ததற்கு ஏலாதி பாடலே காரணமாக உள்ளது.

"பாடகம் சாராமை பார்த்திலார் தாம்விறையும்
நாடகம் சாராமை நாடுங்கால் - நாடகம்
சேர்ந்தார் பகைவழித் தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தார்போல் தீர் உரும்"

(ஏலாதி)

## சில இலக்கியச் சான்றுகளும், கல்வெட்டுகளும்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

(தொல். அகம். 53)

கலித்தொகையில் நாடகத்திற்குண்டான உரை யாடல் பாங்கினை 60-ம் பாடலிலும், 61, 64 -ம் பாடலிலும் காணலாம்.

பரிபாடல் 20 பாடலிலும் வழக்கு

தெ.பொ.மீ. சங்கப் புலவரிடமிருந்து ஒரு நாடகம் கூட வெளிவரவில்லை.

| | |
|---|---|
| கி.வ.ஜ | சங்கநூற் காட்சிகள் |
| சாத்தனார் | கூத்த நூல் (அழிந்தது) |
| ஆதிவாயிலாரின் | பரதசேனாதிபதியம் |
| க.ப. அறவாணன் | இந்திர காளியம் (பதிப்புமூ |
| மூவருலா | காளிங்க நாடகம், குபக்கூத்து |

| | |
|---|---|
| நளவெண்பா | நளன் அவனது மனைவியின் அழகைக் கூத்தோடு ஒப்பிடுதல் |
| விபுலானந்த அடிகள் | மதங்கசூளாமணி |
| வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியர் | நாடகவியல் |
| மறைமலையடிகள் | சாகுந்தல நாடக ஆராய்ச்சி |
| கல்வெட்டில் | "இராஜராஜேஸ்வர நாடகம்" (கி.பி. 984) |

இராசேந்திரனுக்கு, "இராசராச நாடகப் பிரியன்" என்றும் ஒரு பெயர்.

1119-ல் கடலூர் கல்வெட்டு கமலாயபட்டருக்கு (பூம்பலியூர் நாடகம்) நிலம் கொடுக்கப்பட்டது.

## தமிழ் நாடக ஆசிரியர்கள்

பம்மல் கே. சம்பந்த முதலியார், (புத்த அவதாரம்)

சங்கரதாஸ் சாமிகள்,

அண்ணா,

அரு. ராமநாதன்,

த.ஏ. ஞானமூர்த்தி,

ரா. சீனிவாசன் - மு.வ. (பச்சையப்பர்),

எதிராஜிலு (ஔவையார்)

அழகிரிசாமி (கவிச்சக்கரவர்த்தி,)

ஜீவா -( திருவள்ளுவம் தெய்வப் புலவர்.)

கிருஷ்ணசாமி ஐயரின் (மீரா பாடல்)

வ.சுப. மாணிக்கம் (மனைவியின் உரிமை)

ஏ.என். பெருமாள் (இலக்கிய நாடகங்கள்)

பழனி, சிவகுப்புசாமி, கு. ராஜவேலு, நடராஜப்பிள்ளை, மறைமலையடிகள், எஸ்.டி. சுந்தரம், பரிதிமாற்கலைஞர், மனோமணியம் சுந்தரனார்.

தற்போது இராமானுஜம், இந்திரா பார்த்தசாரதி, முத்துச்சாமி, கருணப் பிரசாத், முருகபூபதி, சோ, எஸ்.வி. சேகர் - இப்படியாக விரிந்துகொண்டே செல்கின்றது இந்தப் பாதை.

## இச் சுவடி நூலாசிரியர்

A.M. சுப்பிரமணியம் என்பவர் இதன் ஆசிரியர். அம்போதி' என்னும் கிராமத்தில் புளியம்பட்டி (அஞ்சல்), சத்தியமங்கலம் வழியில் அமைந்துள்ளது இவரின் வீடு* காலம் - 1952 - 53

இதனை மூல ஓலையிலிருந்து பிரதியெடுத்து தாளுக்குக் கொண்டு வந்தவர்.எம். ஆர். சிவப்பிரகாசப் பிள்ளை, இவ்வாசிரியர் சாரங்கதாரன் கதை, மைராவணன் கதை, போன்ற பலவகைச் சுவடிகளைப் படியெடுத்துள்ளார்.

இதனை எழுதப்பட்ட காலம் - 9.4.1958 முடிவு 16.4.1958

## ஓலைச்சுவடி X தாள்சுவடி :

ஓலைச்சுவடியில் இந்நாடகத்தின் தலைப்பு காணப்படவில்லை. தாள்சுவடியில் "சித்திரலேகை கதை" என்று இடம் பெற்றிருக்கின்றது. ஓலைச்சுவடியில் "சித்திரலேகா" என்றுள்ளது. தாள்சுவடியில் சித்திரலேகை, சித்திரலேகா என்று இருபடியும் வந்துளளன.

இத்தகையதொரு நிலையிலேயே நாடகத்தின் தலைவியான உடாங்கனையை, உடாங்கனை என்றும் படியெடுத்துள்ள சிவப்பிரகாசப் பிள்ளை குறிப்பிடு கின்றனர். ஆனால் ஓலைச்சுவடியில் உடாங்கனை என்பது தெளிவாகப்படுகிறது.

ஓலையில் கட்டியணைத்தனழே, (அஃது) பல சுவடிகளில் இருப்பதைப்போலவே இதனுள்ளும்

ள = ழ,

ற = ர

ன = ண

ப = க

ம = ப

என்பவைகள் இடம்பெற்றுள்ளன

| **மூலம் (ஓலை)** | **தாள்** |
|---|---|
| திரசு | திரேசு |
| பாடுகின்ற | படுகின்ற |
| யீசுபரி | ஈஸ்வரி |
| மோசம் | போசம் |
| மலடியில் | மடியில் |

கனவென்றும், கினவென்றும் இரண்டிலுமே பயிலப் பட்டுள்ளது. சில வகையான எழுத்துக்களை அப்படியே தந்துள்ளேன்.

---

* அ.கீ.சு. நூலக அட்டவணை.

**உவமைகள் :**

* மின்னுமுலை மெழுகென்ன உருகுகிற (3 பக்*)
* மூண்ட சமரில்வில்லை மறந்தது போல (5*)
* இந்திரன் இந்திராணி போலே (6*)
* தெருவில் பரதேசிப் போல் (7*)
* லோகமே இகழ்கின்ற லோமியென்னும் (12*)
* இனத்தைவிட்டு பிரிந்திட்ட மான்போல் (16*)
* முளைத்து சிலநாள் ஆகி மழைத்தூரல் காணாப் பயிர்போல் வாடினாள். (18*)
* கனியொடும் இரை திண்ணாப் பேடன்னம் போல் (18*)
* தண்ணீர் தயைகன்ற தாமரைப் போலவே (20*)
* சந்திரன் மீது முகில் சாடுவது போல
* தண்ணீரை நீங்கின தாமரைப் போல (50*)

**பழமொழிகள் :**

* துற்சனனைக் கண்டால் தூரப் போய் நில் (12*)
* பழுத்த பூசணிக்காய் சோத்தில் தானே

  பதித்திருந்தும் தொழிலெனக்குப் படினம்மா (31*)
* உற்றது சொன்னால் அற்றது ஒட்டுந்தாயே (32*)
* கூறுகெட்ட மணியக்காரனைக் கண்டால்

  குடிகள் தலைமேல் ஏறுவார்களாம். (46*)

* தாள் சுவடியிலுள்ள பக்க எண்கள்

## பேச்சுத் தமிழ் :

நாடகம் என்பதினால் இதனுள் உள்ள வாய்மொழிச் சொற்களைத் திருத்தாமல் ஓலைச்சுவடியில் உள்ளதைப் போலவே கையாளப்படுகிறது. அப்படிப்பட்ட சில வார்த்தைப் பகிர்வுகளாக,

என்றனை, (என்றழை) கினாவிலே, ஈய்ந்தேனே, துடைக்குள், மகிட்சி, திரேக, (தேகம்), யீசுபரி, துடர்ந்து, கேழ்க்க, விசிரி, திருணி (தரணி), வீருதி, கார்க்கவே, புட்ப, (புஷ்பம்) கழைத்துவேன் (களைத்து), இழைத்துவேன் (இளைத்துவேன்) சாரி (சவாரி), தயிரியம், வெயர் நீர் (வியர்வை), சிலவு, சீச்சி போன்றவைகள்.

## யாப்பு வகைகள் :

இந்நாடகம் இசை நாடகம் என்பதால் இதனுள் விருத்தம், தரு, சிங்காரப்பத்தியம் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| விருத்தம் | - | 17 இடங்களிலும் |
| தரு | - | 22 இடங்களிலும் |
| சிங்காரப் பத்தியம் | - | 10 இடங்களிலும் |
| வசனம் | - | 25 இடங்களிலும் |

இடம் பெற்று அவைஅவை தத்தமக்குரிய வேலைகளை இசைவுடனும், செறிவுடனும், நுட்பத்துடன் விளக்கி இனிமையைப் பயக்கிறது என்றால் உண்மையே.

## இதனுள் பாடப்பட்டுள்ள இராகங்கள் :

* மோகன ராகம்
* தோடி ராகம்

* தக்கு தகு திருதாகிர்த கிடதாமென

தொக்குத் திகுதகுமேத தோகிர்தகிடதோமென (22 பக்)

* இர்தகிடா தரதிமி கிர்தகிடா தாமென

இர்தகிடா தோமிமி கிர்தகிடா தோமென (22)

* தத்திம் ததிதிரு தாகிர்த கிடதாமென

தித்திர திகுதிகு திங்கிர தகிடதோ மென (22)

* தய்யா தோம் கீர்தகிட தாவென

தய்யா தேதேம் கிர்தகிட தோவென

### சித்திரலேகை கதை - உண்டான சூழல் :

அக்காலக் கட்டங்களில் தெருக்களில் இதுபோன்ற சரித்திர, புராண நாடகங்கள் நடிக்கப்படுவது வழக்கம். இந்தச் சூழலில்தான்,

அநிருத்தனும் உஷையும் கனவில் கூடி மகிழ்ந்தக் காலத்தில், வாணாசூரன் அநிருத்தனைச் சிறைப்படுத்த, அப்போது. திருமால் வாணாசூரனிடம் போர்செய்து, அவனுடைய கைகளை அறுத்துத்தள்ளவே, அவனது தாய் வேண்டுதலின் பொருட்டே உயிர்ப் பிச்சைக் கொடுக்க, பின்னால்,

உஷையையும் அநிருத்தனையும் திருமாலிடம் ஒப்படைத்துக் காகலைச்* சென்று இறைவனை வழி பட்டான் (வாணாசூரன்) என்பது புராணக்கதை ☛

* சுவடியில் உள்ளவாரே

☛ இக்குறிப்பு ஸ்ரீமத் பாகவத்தில் காணப்படுவது.

## கதைச் சுருக்கம்

**"சித்திரலேகை கதை"** என்கிற இந்த நாடக சுவடியில் நுவலப்படுவது என்னவென்றால்...

சித்திரலேகை - கபந்தனின் மகள்

உஷை (உபாங்கனை) - பாணாசூரனுடைய மகள்

சித்திரலேகை + உழை = உயிர் பாங்கிகள்

அனிருத்தன் - இவன் உஷையின் கனவில் வந்த மன்மதன். இவன் மூலமாக பசுலையுற்று மயங்கியவள் உபாங்கனை.

சித்திரலேகை - அனிருத்தன் வழங்கிக் கொண்டிருக்கும் போது கட்டிலுடன் இவனை உஷையிடம் ஒப்படைக்கிறாள்.

இவ்வகையில்அமைந்த இந்த நாடகச் சுவடியானது முற்றுப் பெறாமல் உள்ளது. இதனை நாடகப் பாங்கில் சொல்லும் விதமாவது,

"தற்புலாவிய துற் பொழித்திடும்*
நற்புலாவிய கற் பழித்திடும்"

என்று உடாங்கனை தன்னெஞ்சுக்குப் பேசுவதாக அனிருத்தனின் செயல்கள் ஞாயமா என்றெல்லாம் வினவுகிறாள்.

உடாங்கனையின்பாங்கிகள்- நீலவன்னி, இந்திரவல்லி,
பஞ்சரபாணி, ஏககூட்சி,
பரிமளாங்கி இன்னும் பலர்

சித்திரலேகை - அதிகத் திறம் பொருந்திய மாய
சாலக்காரி.

"பஞ்ச தந்திரக் கள்ளன் என்று முந்திக் கண்டால்
மிஞ்சவிடு வேனோ நீதான் - கெஞ்ச விடுவேனோ
இந்திர சாலக் கள்ளனென்று முந்திக்கொண்டால்
சிந்தைக் கொடுப்பேனோ - உன்னோடே நான் -
வந்துபடுப்பேனோ"

என்றும்,

காதலுக்குண்டான காரணம் யார் என்பதை சித்திரலேகை சொல்லும் பாங்கானது,

"ஆ.ஆ. கேளுங்கோ பாங்கிப் பெண்களே
நமம் துரைசாணிக்கு வந்து மயக்கத்தைக் கூர்ந்துப்
பார்த்தால் பிரம்மா, விஷ்ணு, ருத்திரராலும்,
அசுரராலும், அரக்கராலும், மந்திரவாதிகளாலும்
வந்த வினையுமல்ல - கர்மநோயல்ல, காச்சல்ல,
பிராணனைக் கொண்டுபோக வந்த நோயல்ல
மதனராசன் செய்த தோதகத்தாலே
வினையில்லாமல் வேறே வினையல்லடி
பாங்கிமாரே" என்கிறாள்.

ஒரு ஆணின் உச்சிமுதல் பாதாதிகேசம் வரை அனுஅனுவாக உஷையின் கண்களால் துளைக்கப்பட்டு வருணிக்கிறாள்.

இப்படியாகச் செம்மையாக வியப்புறும்படி அமைந்துள்ள இந்த நாடகமானது பழங்காலத்துத் தெருகூத்து நடையில் (மெட்டில்) பாடப்பட்டுள்ளது.

---

* தாள் சுவடி. பக்க எண் : 8

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ☛ | நன்றியுரை | 5 |
| ☛ | பதிப்புரை | 6 |
| ☛ | கதைச்சுருக்கம் | 19 |
| ☛ | நூல் | 23-81 |
| ☛ | பின்னிணைப்பு | |
| ☛ | அருஞ்சொற்பொருள் | 82-84 |
| ☛ | சொல்லடைவு | 85-86 |
| ☛ | செய்யுள் முதற்குறிப்பகராதி | 87 |
| ☛ | பயன்பட்ட நூல்கள் | 88 |

## ஹரி ஓம் நன்றாக
## குரு வாழ்க குருவே துணை
## &
## சித்திரலேகை கதை
## ஓம்

1. கட்டியணைத்தனளே - வுடாங்கனை
கட்டியணைத்தனளே.
கட்டியணைத்தனள் வட்டமுலை மீதில்
இஷ்டசிங்காரனை மேட்டி மேட்டி மிக
(கட்டியணைத்தனளே)
அரசர் திலக சந்திரனே - ரம்பையர்புகழ்
அஷ்ட போக இந்திரனே
சுரசமதில் வசந்தனே - எனக்கேற்கும்
சுருபஞ்செய் தகுந் தந்திரனே - நல்ல
புருஷனே நீ யென்று பூவை மனமகிழ்ந்து
இருகையால் உரத்தோடே - இறுக்கி
இறுக்கிச் சேர்த்துக் கட்டி
புரக்கணைகள் - சொரிந்து அதனால்எந்தன்
திரேக விசிதங் கரைந்து
அறிவு நினைவு மறந்து - நான் படுகின்ற
ஆயாசந்தனை அறிந்து
அரனுக்கிட பாகம் அமர்ந்த அம்பிகைத்தந்த
வரங்கள் எனக்கிப்ப வந்து லபித்ததென்று
(கட்டியணைத்தனளே)

காய்த்த தருவினங்களே - பாவையைத் தேடி
கனிகள் தந்தது போலவே - சிவனைத்தானே
மாய்த்த தடங்கடலைத் தேடியே - சஞ்சீவிவான்
மலைகள் வந்ததுப் போலவே பொன்பொடிகளை
மேய்த்த திரேகத்து மேன்வந்தை குணத்துக்கும்
வாய்த்த மாப்பிள்ளைத்தானே வலியச் சிக்கினான் என்று
கட்டியணைத்தனளே - வுடாங்களை
கட்டியணைத்தனளே.

## 2. விருத்தம்

தோட்டமாய்க் கனவில் வந்து
சிந்தை தான் உருக்காம
கோட்டியொத் தவனைக் கொங்கை
குடங்கள்மீ தணைத்து ரண்டு
நாட்டமே தீர்ந்து பார்க்க
நாதனைக் காணா தாலே
தாஷ்டகந் தேய்ந்து மாது
தாங்கனைச் சாற்று வாளே.

## வசனம்

அகோதெப்படியென்றால் கனாவிலே வந்து சரச சல்லாபம் செய்த புண்ணிய புருஷனை வுடாங்கனைத் தனது கையினாலே தாவி ப்பிடித்து தனபாரங்களின் மீதிலே கெட்டியாய் அணைத்துக் கொண்டு ஈஸ்வரி சொன்ன வார்த்தை நிச்சயமாச்சு என்று மாய்ந்த பேருக்குச் சஞ்சீவி வாடைப் பட்டாப்போலாச்சுது என்றும் என்னுடைய ரூபலா வண்ணியத்துக்கும் சாமார்த்தியத்துக்கும் குணத்துக்கும்

இசைந்த நாயகன் வலிய சிக்கினான் என்றும் அநேக சந்தோஷமாக நித்தி ரை தெளிந்து கண்திறந்துப் பார்க்கவும் ஒன்றும் காணாததனாலே சந்தோஷமும் சந்தேகமும் சரிநிறை. லோகம் சொல்லுவதுபோலாச் சென்று அய்யோயிது யென்ன அநியாயம் என்று மனதிலே எண்ணாததெல்லாம் எண்ணி கைகள் பிசைந்து சொல்லப்பட்ட மார்க்கம் எப்படி என்றால் :

## 3. தரு

என்ன காரணமிது நானறிகிலேன் - ஓஓஓசிவனே
என்ன காரணமிது நான் அறிகிலேன்
என்ன காரணம் என்னிருதம் அது
மின்னு முலைமெழு கென்ன உருகுகிற
(என்ன காரணமிது)
தேட்டரமாய் இடையைக் கட்டிப்பிடித்ததும்
நாட்டம் திறக்குமுன் ஓட்டம் எடுத்ததும்
(என்ன காரணமிது)
பாரதனம் அதன் ஊரிய விரகமது
தீரவும் அணைந்தவன் சோரனான விதம்
(என்ன காரணமிது)
தீர்க்கமா யெனே - மனது ஏற்கும் அழகதனைத்
தூக்கம் தெளிந்துநான் பார்க்க மறைந்தவிதம்
(என்ன காரணமிது)
துயிலும் வேளைஎன் மயிலினைக் கரந்ததும்
நயனம் திறக்குமுன் ஒயிலுடன் பறந்தது
(என்ன காரணமிது)
மோடி கொண்டுவிளை யாடிவந்து எந்தனைக்
கூடி அணைத்தவர்தான் ஓடி மறைந்த வகை
(என்ன காரணமிது)

மெள்ள வந்தும் என்னுள்ளம் அறிந்து கைக்
கொள்ள வந்தவன் கள்ளனான விதம்
(என்ன காரணமிது)
சொற்பனம் காண்பது தப்பிதம் இலையென
அற்புதம் அம்பிகை சொற்பொரு ளானவிதம்
(என்ன காரணமிதுநான்)
இரண்டு கொங்கைகளை இரணியவடங்களை
நெருடி மருவினான் திருடனான விதம்
(என்ன காரணமிது நானறிகிலேன்)
கட்டழதினோடு மெட்குடன் கையில்அகப்
பட்டபொருளது பொட்டெனப் போம்விதம்
என்னகாரணமிது நானறிகிலேன் - ஓஓஓ சிவனே
என்ன காரணமிது நானறிகிலேனே.

## 4. சிங்காரப் பத்தியம்

என்ன திகரூபபோமோ என்ன முகிலரூபமோ
என்ன செகசாலமோ - என்னமாயம்
என்ன சுகலாபமோ என்னதி கலாபமோ
என்ன அவதானமோ - என்ன சூட்சம்
என்ன விதஞானமோ என்ன பதிபாகமோ
என்ன கலைக்கியானமோ - என்ன ஞாயம்
என்ன தவுதாயமோ என்ன வெகுசாயமோ
என்ன சுகமோகமோ - என்ன சுரூபம்
விண்ணில் இமையோர் செய் மோசமோ
இறைவா தொழிலோ இன்னுமென்ன சூதுக்கு
நா எழாதவனோ இதுவிபர
அறியாமல் கைகளும் விட்டவனே யெந்தன் மனமே.

## 5. தருவு

மனதே நான் மோசம் போனேனே
மூண்ட சமரில்வில்லை மறந்துயிருந்தார்
போலானேனே
(மனதே)

எந்தன் கினாவில் வந்து சய்யோகம் செய்த
மன்னர்கள் திலகனை மதனை வொய்யாரனை
பின்னலின் சடைதனில் பின்கட்டாய் கட்டாமல்
(மனதே நான் மோசம் போனேனே)

கள்ளப்பயலென்று அஞ்சியே அப்பாலே
போடாவென்று
கருந்து வார்த்தைகள் பேசியே
கள்ளன்திரேகத்தின்மீ கனகத்திரேகத்துள்ளாரை
கல்லுக்கொண்டு அடியாமல் கன்னத்தில் இடியாமல்
மல்லுக்கு இழுக்காமல் மடியில்கைபோடாமல்
(மனதே நான்மோசம் போனேனே)

## 6. வேத சாஸ்திரங்கள் சாட்சியாய்*
## (மெய்யா மாகாசவாணி)

மேதினி சாட்சியாக
வித்தாரப் பெண்ணேயுனை விட்டுப் பிரியேனென்று
சத்தியஞ்செய்துபின் தழுவியணையாமல்
(மனதே நான் மோசம் போனேனே)

---

* சுவடியிலுள்ளவாறே

எந்தஊர் எந்த தேசமோ - இந்த இந்திரகாலக்கள்ளன்
எந்த நா டெங்கே வாசமோ.
எந்தக் குலம் எந்தன் கோத்திரம்
எந்தத் தொழில் எந்தச் சாதி ஏந்திழைக்கிப்பவும்*
எல்லாமும் சொல்ல வென்று
கூர்ந்து நான்கேட்காமல் கூடத்துடா மெல்
மனதே நான் மோசம் போனே
மூண்ட சமரில் வில்லை மறந்து யிருந்தார்
போலானேனே.

## 7. சிங்கார - பத்தியம்

இந்திரனே - கோகர்ன்ன கெசகர்ன்ன - இந்திரனே
இந்திரசாலத் தொடு மயேந்திர சாலா
தந்திரனே திரவிய குபேந்திரனே சம்பிரதாயனே
எழில் மாதர் சரசலோலா
சந்திரனே மோக நிட பந்திரனே
மகராச சுமுகனே கலியாண சுகுந்(ர்) தவசன
சந்திரனே மதனே குபேந்திரனே மோகசஞ்
சாரனே தீரனே மன்னாசாமி
என்னைநீ யாட் கொள்ள மனமகிழ்ந்து
(ரு) திவ்விய சல்லாபஞ் செய்திடில்உன் வலிமை
போகுமோ தாமிஷஞ்செய்தால் தரமல்லவே
பேதகமில்லாமல் வாரும்எந்தன் பிராணநாயகா.

## 8. தரு

மோடி செய்யாமல்இங்கே வந்திடலாஞ்சாமி
மோக னாங்கிக்கே இன்பந் - தந்திடலாம்
இன்னொருதிரமே நாமள் சேர்ந்திடலாந் துரையே
இந்திரன் இந்திராணி போலே வாழ்ந்திடலாம்
மேகவர்ணன் அசுரூபத்தைக் காட்டலாஞ் - சாமி
மேகக்குழலில் மலரைச் சூட்டிடலாம்
மன்னன் மறைந்திருக்கல் ஆகாதையா - சாமி
மாதுபாவங் கைக்கொள்ளப் போகாதய்யா
கணவனே நான்வேறுநீ வே றெண்ணலாமோ -
துரையே
என்னை கலியாண காரியமே பண்ணலாமே
உள்ளத்தில் வேறுஓர்ஆசை நாட்டேனையா - இனிமே
உன்னை மறந்திருக்க மாட்டேனையா
பாவப்புண்ணியம் எண்ணிப் பாருமையா - உனது
பட்டத்துத் தேவியெதிர் வாருமையா
மோடி செய்யாமல் இங்கே வந்திடலாஞ்சாமி
மோகனாங்கிக்கே இன்பம் தந்திடலாஞ்சாமி.

## 9. சிங்காரப்பத்தியம்

மோடிசெய்யாமல் என்னெதிர்வந்து நின்றால்
முககாந்தில் ஒயிலாண்மை மூயுமோ சொல்
ஓடி வந்தென்முகம் பார்த்து வசனிக்கில்
மெய்யோது செவ்வாயின் முத்து திருமா
வாடி என்றழை உனது பின்கூட்டி யேகினால்
மன்னனே உன்னமிசை மங்குமோ சொல்

தேடிவந்து எமைமணஞ் செய்கின்ற வரையிலும்
சேமமா என்மனந் தேறுமோ சொல்
தெருவில் பரதேசிபோல் திரியலாகுமோ
பரிதவிப்பதும் ஒரு பாவமல்லவோ
கருவினை வதைப்பவர் கற்பழிப்பவர்
பெருமையது பெறுவரோ பிராணநாயகா.

## 10. தரு

என்பிராணநாதா கற்பழித்து முன்செய்த தீதா
அன்பாகன உள்ளத்தில் என்போகமே வேண்டி
சமபோகஞ் செய்தவன் பின் போகாஞாயமோ
(என் பிராணநாதா)
கூடி வருவலு மோடி செய்தானே
வாடி மனஞ்சலித்து ஓடி வய்தானே
(என் பிராணநாதா)
பூதலந் தனிலே சாதி பேதமில்லாத
மாது விரகதாப வாது வென்று ஒழிந்தது
நீதியோ சாமி - நானேயுனக்கு வாதியோகாமி
பாசபந்தயம் பேசி வைத்ததும்
ஆசைதந்து எனை மோசம் செய்ததும்
நீதியோ சாமி நானுனக்கு வாதியோ காமி
பழுதில்லா தரிதயந் தொழுது கொண்டிருந்தானும்
எழுது வேத சாஸ்திரம் முழுதும்பொய் போகிலும்
பெண் பழிதள்ளிப் போமா எனக்கேற்கும் எழிலுள்ள
காமா
தற்புலாவிய துற் பொழித்திடும்
நற்புலாவிய கற் பழித்திடும்

பழிதள்ளிப்போமா எனக்கேட்கும் எழிலுள்ள காமா
சல்லாடலீலைகள் எல்லாந் தெரிந்த ஒன்றும்
கல்லாதவன் போலும் பொல்லாதவனைப் போலும்
சொல்லாது ஓடினதேன் கண்திறக்குமுன்
நில்லாது ஓடினதேன்
தீரன் வாணாசூரன் அருளிய காரியே போய்
வாரேன் அனுப் பென்று
சொல்லாது ஓடினதேன் கண்திறக்குமுன்
நில்லாது ஓடினதேன்.

## 11. சிங்காரப் பத்தியம்

மன்னனே அதிகவிற் பன்னனே எனையாள்
மனதிலாதே போனவர்மம் என்னமோ
சொன்ன சொல்லள்ளாத கன்னிதனை விட்டுநீ
தொலைதூரம் ஓடினால் தோஷமல்லவோ
முன்னமே உனதுகுல கோத்திரம் அறியாமலே
மோகித்த வனிதைமேல் மோடியாமோ
என்னமோ உன்னழகை என்னாளுங்கோருதே
எந்தன்மீது உந்தனுக்கு இச்சையில்லையோ
மோசமெனும் தொழிலை ராசமுறை யேற்குமோ
சாசனம் தானபொருள் எனஉனைத் தழுவிளேலால்
காசினிஈரேழும் அழியும் ஒருகணவன் மீதிலே
ஆசையது வைத்து வாழ்கேன் இனிஎன்ஆசை
நாயகா

## 12. தரு

கனவில் வந்தணைத்த கள்ளனே உனை
அல்லால் வேறொரு கணவன் தன்னை
நினைவில் கொள்ளனே
அனகனுக்கும் அதிக ரூபனே - மாபகையா
என்னாவியைக் கரந்தத் தீபனே -
அடக்கமுடனே சிரித்து சிரித்து
முடிக்கிமகுடந் தரித்து (தரித்து)
கடைக்கண் சலுதாய்ப் பிரித்துப்பிரித்து
துடைக்குள் படத்தைக் குறித்துக் குறித்து
(கனவில்)
வல்லிருள் தனைத்தரிக்குமே ஒய்யார மானவனான
சந்திரன் எழில் பரிக்குமே.
மெல்லியர்கள் மெய்கரைக்குமே எழில்மிகுந்த
எழில் விழிகளைப் பரிக்குமே - நல்ல
மெருசுமுகத்தைக் காட்டிக் காட்டி
வரிசை நகைகள் பூட்டிப் பூட்டி

## 13. தரு

சாய் விழிகள் தீட்டித்தீட்டி - நல்ல
சரசப் பழமை நீட்டி நீட்டி
கனவில் முந்திமயக்கிப் பொடிகள் தூவிய
சொகுசதா என்முலைகள் மீது முகத்தைப்பாவியே
உந்தன்ஆவி எந்தன்ஆவியோ ஒன்றுதான் என்று
உரைத்து
எந்தன்உடலைத் தாவியே வரத்தில் உரத்தைத் தீத்தித்
தினமலரைச் சாத்திச் சாத்தி

கரத்தின் முதுகைப் போத்தி போத்தி
நிறத்தைச் சலுதாய் மாத்தி மாத்தி
(கனவில்)
சரீரம் உமது நாவில் வழித்துத்தான் கமலகரத்தில்
சரிகைத்துகிலை நெகிழ இழுத்துத்தான்
பின்னும் எந்தன் கரிய குழலை அவிழ்த்துத்தான்
பின்னும் எந்தன் காரமின்னிடையைத்துவள
வழைத்துத்தான்
கதவித் துபைகள் நீத்தி நீத்தி
மதன சுனையை நோக்கி நோக்கி
அசுனில் விரகந் தேக்கி தேக்கி
விரகவிதனம் போக்கி போக்கி
கனவில் வந்தணைத்த கள்ளனே
உனையல்லால் வேறொரு கணவன்
தன்னை நினைவிற் கொள்ள னே.

## 14. ஈரடிச் சிங்காரப் பத்தியம்

மகமேரு நிகரான புய செயபலசாலி
மகிபாலன் என்று நான் வாழ்த்திமுத்தம் ஈ(ய்)ந்தேனே

மடமாதர்உடல் மீது மலர்வாளிதனை ஏவும்
மதராசன்என்று நான்மகிட்சியாய் அணைத்தனே

செகமீது தவமேவு முனிவோர்கள் மனமேவு
செகதீசன் என்று நான்சேர்ந்து உறவு கொண்டனே

செகரூபம் அகரூபம் தசரூபம் அதுவான
திருமார்பன் என்று நான் செவ்விதழை ஈ(ய்)ந்தனே

சனசாலி என்றுநான் கொஞ்சிமுகம் பார்த்தனே
சுகமேதிடமா உயர்வான் உலகையாளும்

சுரராசன் என்று நான் சொல்லி இஷ்டங்கொண்டனே
துடிராசர் புகழ்வாசி யெனுவாகனே குபோ*

சுயயோகன் என்று நான் சொக்கி மெய்மறந்தனே
திருணி* மானாகி நாலுந் திருடனல்லவோ

திருடனே முந்திநான் சேதி கேட்டில்

பிராணம்அது போகிலும் சடையினால் உனைப்

பின்கட்டாய்க் கட்டுவேன் பிராணநாயகா.

## 15. தரு

பஞ்ச தந்திரக் கள்ளன் என்று முந்திக்கண்டால்
மிஞ்ச விடுவேனோ - நீதான் - கெஞ்ச விடு
வேனோ
இந்திர சாலக் கள்ளன் என்று முந்திக் கண்டால்
சிந்தை கொடுப்பேனோ - உன்னோடே நான் -
வந்துபடுப்பேனோ
மோசக்காரக் கள்ளன்என்று முந்திக்கண்டால்
ஆசைப்படுவேனோ - உன்னைநான் -
ஏசாதுவிடுவேனோ
பாதகரானப் பயல்என்று முந்திக்கண்டால்
வாதத்துக்கு நிக்கேனோ - உன்னைநான் - வீதிக்கு
இழுக்கேனோ
கெட்டப்புத்திப் பயலென்று முந்திக்கண்டால்
கட்டாமல்விடுவேனோ - உன்தலையைநான் -
வெட்டாமல் விடுவேனோ
சின்னபுத்திப் பயலென்று முந்திக்கண்டால்

* சுவடியில் உள்ளவாறே

தேகத்தில் (திரேக) சேர்ப்பேனோ - உந்தன் இடம் -
மோகத்தைத் தீர்ப்பேனோ
மித்திர பேதக்கள்ளன் என்று முந்திக்கண்டால்
முத்தங் கொடுப்பேனோ - உந்தன் இட பித்தம்
பிடிப்பேனோ
துற்சனனைக் கண்பால் தூரப் போய்நில் என்ற
சொற்பொருள் பொய்யாமோ - எந்தனிட
கற்புப் பரிபோமோ - நாத்திசையும் புகழ்
அம்பிகைதாய் சொன்ன வார்த்தையும் பொய்போச்சே
நானே - அவ - கீர்த்திக்கு ஆளாச்சே
ஓடி மறைந்தவன் பேடிப்பயல் அவன்
ஊரையுங் காணோமே
தேடிப் பார்த்தால் ஆரையுங் காணோமே

## 16. சிங்காரப்பத்தியம்

கூசாமல் வாள்தனில் வீழ்ந்து எனது பிராணனைக்
கொல் என்றே சமுத்துசு கூறினாலும்
மேசாதி பூதி புகழ் பூபாலன் என்னவே
மிக்காதி சூரன்என மெச்சினாலும்
பேசாத ஊமையென கபடியென வஞ்சன்என
பேடியெனத் திருடன் எனப் பேசினாலும்
ரோசமே மானமே ஈனமில்லான் ஏனும்
லோகமே இகழ்கின்ற லோபியேனும்
நண்பன் என உன்னழகை நற்றினாலும்
கண் மாவைநீங்கி மனக்கபடம் நீங்கி
வன்மையுடன் எந்தன்முன் வாராதே போனால்
பெண்செனனம் என்செய்வேன் பிராணநாயகா

## 17. தரு

என்னென்ன சொன்னாலுந் தந்திரஇந்திர
சாலன் அல்லனே நீ -
இன்னமும் வாராததுதான் என்னமோடியோ
இன்னொரு தரமும் வந்து என்னிட மார்பில்
அணைத்து

எதிருன் ஆற்றான் சேதமேது என்சாமிசாமி
எதிருன்ஆற்றான் சேதமேது - எதிரான்ஆற்றான்
சேதமேது

எகிரிநாற்றிலும் வீழாது - இக பாதகருள கேராது*
இறைவனுக்கு இது போதாது
நகையினுக் கொணரவாராது நலன்எனப் பேறு போராது
நிகரில் அரசர் சாது நினைவினுக்கு இசைந்தமாது
(என்னென்ன)

வாடிய பயிர்க்கு மழைவந்ததுபோல் எந்தன்
கிட்டவந்து எந்தன்உறவை நன்ன என் சாமி சாமி

மோடி என்ன சாலமென்ன மோசமென்ன என் முகத்தில்
முத்தங்கள் தருக எண்ண என் சாமி சாமி
நத்தயதரத்தின் உண்ண நற்பொனீசகனித்த கிண்ண
சித்திர தனத்தைக் கண்ணா சிக்குனுதலுக்கும் ஒண்ண
ஒத்தியே சுகிர்த்திபண்ண வத்தமிகுணத்தி பெண்ணாள்
(என்னென்ன சொன்னாலும்)

மெத்தையில்படுக் கொணாமல் நித்திரையுஞ்
செய்யொணாமல்
மெய்யினில் சிறந்த மோகம் என்சாமி சாமி

* இச் சுவடியில் உள்ளவாறு

அஸ்திரங்கள் தூள்தூளாக ஒன்றினோடு

ஒன்றனுக்கிடாமல்

அம்பரத்து எழுந்து போக என்சாமி சாமி (புண்ணாக)

அம்பரத் தெழுந்து போக அங்கசன் உள்ளம் புண்ணாக

எம்பருக்கு கந்தபோக முண்டு சுகிப்பதற்காக

சம்பரதுதுடனேநாக சர்ப்பம் அணிந்தவன் திரேக

மும்பிடித்தணைக்கும் யோக முக்கண்ணி அருள்

மெய்யா

(என்னென்ன சொன்னாலும்)

செந்திவானைப் படிக்கு(ம்)உன் சிந்தையது

தான்மிகத்தேன்

இங்ட நடக்கிறேன் என்சாமி சமி

இந்துவை பழித்திட விளங்குமுன் கனிமீதில்

என்முக மடுக்கிறேன் என்சாமி சாமி

என்முக மடுக்கிறேன் என்உயிர் கொடுக்கிறேன்

வர்னமும் படிக்கிறேன் மஞ்சனஞ் சோடிக்கிறேன்

தண்ணிலும் படுக்கிறேன் சந்தனம் வடிக்கிறேன்

உன் மையல் துடைக்கிறேன் உன் கைகால்

பிடிக்கிறேன்

என்னென்ன சொன்னலாலுந் தந்திர இந்திர

கள்ளனே - நீ - இன்னமும் வாராதது என்ன மோடியோ

## 18. சிங்காரப் பத்தியம்

பாரீப்பதி எனதருள் தார்க்கனவில் நான்கண்ட

பார்த்தீபன் வசன எழில் பகரவசமோ

மேர்தனை நிகர்த்த தடி பெலனோடு மெதுத்த அசுரர்

வெற்றியோடும் உயிரோடு மீள வசமோ

சீர்பேர்நடக்கும் ஒயிலளவு நிறைஎது வென்று
செகமெலாந்தாங்குவோன் செப்ப வசமோ
தார்முகமும் மிசை யோகாவி செகத்தி நிறை
சரஸ்வதி அம்மனால் சாற்ற வசமோ
தன்அழகு தனைமதிக்க வந்தது தானும் ஒருவனே
என்அழகுதனை மதிக்க அவன்
மனதுக்கேட்கவில்லையோ
முன்னழகுதனை மதிக்க அதிக மோகமாகுதோ
பின்னழகுதனைமதிக்க ஈவ்பிரியவில்லையே
பிரபல ஈசுவரி

## 19. தரு

இதுஎவர் செயல்என்று பொருள்இழிந்தார் போலும்
எண்ணாது எண்ணுதம்மா - ஈசுவரிதேவி -
எண்ணாது எண்ணுதம்மா

மதியை மயக்கியபின் மறைந்தோனை மறக்கவும்
மனதும் வருந்துதம்மா - அம்பிகைதாயே மனதும்
வருந்துதம்மா

கூடிக்குலாவிய இன்பந்தனை நினைத்தால்
கொங்கைகள் தளருதம்மா - ஈசுவரிதேவி -
கொங்கைகள் தளருதம்மா

தோடி ராகத்தாலே பாடி அலுந்திடுள்
தொண்டையுங் கம்முதம்மா பார்வதிதாயே -
தொண்டையுங் கம்முதம்மா

சொற்பனந் தனில்வந்த சொர்ன்ன அழகு தன்னை
சொல்ல முடியாதம்மா ஈஸ்வரிதாயே -
சொல்ல முடியாதம்மா

அற்புதன்னஎழில்தன்னை எப்பக்காணுவம்
ஒருவன்
ஆவிபதறுதம்மா ஈசுவரிதேவி - ஆவி
பதறுதம்மா

சேர்ந்துஅணைத்த விதத்தை நினைக்க
நினைக்க எந்தன்
திரேகந்தளருதம்மா ஈசுவரியை என்-
திரேகந்தளருதம்மா

காந்தன் வடிவம்போலே பார்க்கதிசையெங்கிலுங்
கண்ணனுக்குத் தோணுதம்மா ஈசுவரியே!
என் கண்ணுக்குத்தோணுதம்மா
மதனக்கனைகள் தன்னை விலக்குந்திறமைச்
சொல்ல
வாய்லட்சம் போருதம்மா - அம்பிகைதாயே -
வாய்லட்சம் போருதம்மா
அதரக்கனி கடித்த பதனத்தினை நினைக்க
ஆவிபதறுதம்மா ஈசுவரியேஎன்
ஆவிபதறுதம்மா
நாலாவிதங்களிலும் மேலாம் விதத்தைப் பார்த்தால்
நமக்கான புருஷனம்மா - லட்சனதீரன்
நமக்கான புருஷனம்மா
காலாலே செய்யச் சொன்னால் வேலை முழுதும்
நானே
கையாலே செய்யலாமம்மா ஈசுவரியேஎன்
கையாலே செய்யலாமம்மா
கும்பாய்தனங்கள் ஒன்னை நம்புபாங்கை நினைக்க

கொண்டை குலையுதம்மா ஈசுவரியேஎன் -
கொண்டை குலையுதம்மா

செம்பவழ இதழைக் கவ்வும் பாங்கினை நற்றினைச்
சிந்தை உருகுதம்மா அம்பிகையேஎன்
சிந்தை உருகுதம்மா
கடுந்தோடு திருடன்பின் தொடர்ந்தோடயிலை
என்றன்
கால்கள் பதறுதம்மா - ஈசுவரியே என்
கால்கள் பதறுதம்மா
நடந்தோடு திருடன் நின்றன் அத்தரை சிக்கலை
யென்றேன்
நயனம் பதறுதம்மா - அம்பிகையே என்
நயனம் பதறுதம்மா
மன்னவனூர் கேழ்க்க மறந்திருந்தோமென்று
வாயும் பதறுதம்மா ஈஸ்வரியேஎன் -
வாயும் பதறுதம்மா
பின்ணங்சடையில் கட்டமறந்தோம் என்று என்ஆவி
பெருமூச்சுக் கொள்ளுதம்மா அம்பிகை தாயே
பெருமூச்சுக் கொள்ளுதம்மா

கட்டழகனைத் தாழ்வும் மெட்கு நழுவுஞ் சென்று
கைகள் தளருதம்மா ஈசுவரியே என் கைகள்
தளருதம்மா
இஷ்டத்தை இன்பம் அனுபவிப்போம் என்று என்
இருதயங்கோருதம்மா ஈசுவரியே என்
இருதயம் கோருதம்மா

இனத்தை விட்டுப்பிரிந்திட்ட மான் போலே நான்
எப்படிப் பிழைப்பேன்நான் ஈசுவரியே நான் -
எப்படிப் பிழைப்பேனம்மா

நினைத்துப்பார்க்கப் பார்க்க நிசமாகச் சொல்கிறேன்
நீ செய்த கபடமம்மா ஈசுவரிதாயே - நீ செய்த
கபடமம்மா
எயிலும் ஒயிலும் ஆண்மை குணம் இவை
நான்கில் ஒன்று
எதை மறந்திருப்பனம்மா ஈசுவரிதாயே -
எதை மறந்திருப்பனம்மா
ஓலை மேல்(முலை) மெழுகாக உருகுதே
நினைத்தாக்கால்
உயிரும் பதறுதம்மா ஈசுவரிதேவி உயிரும்
பதறுதம்மா

## 20. விருத்தம்

சத்தியாமளை யாமாவின் தங்கையே நீதான் செய்த
மித்திரமல்ல வேரோர் மித்திரமல்லக் கண்டாய்
வெத்திசேர் வரத்தை நீதான் வேண்டி
ஈந்ததைத் தவிர்த்தால்
குற்றமே சொல்வதல்லால் கோதைநான் என்
சொல்வேனே.

## வசனம்

அகோவாருமம்மா தாயே சருவலோக தயாபரிலோக நாயகியே பராசக்தி சிவமனோர் மணி இந்தக் கபடஞ் செய்தது நீயே அல்லாமல் வேர் ஒருவர் செய்ததல்லவே -எனக்கு நீ மனதில் இஷ்டமாகக் கொடுத்த வரப்பிரசாதத்தை நீயே ஆகாமல் செய்தால் நான் என் வாயினாலும் மனதினாலும் உன்னை நொந்து உயிர்விடுகிறதே யல்லாமல் வேறே நானென்ன செய்யப் போறேனம்மா தாயே.

## 21. விருத்தம்

எப்பநான் கனவில் வந்தான் எழில்தனைக்
காண்பமென்று
எப்பநான் அவனைக்கூடி இந்திரன் இந்திராணி போலாய்
எப்பநான் பிழைப்பன் என்று எண்ணியே மதிமயங்கி
தப்பிலா வடிவ மாடாங்கணை சோபித்தாளே

## வசனம்

ஆஆ நம்முடைய கினாவிலே வந்த புண்ணிய புருஷனுடைய ரூபலா வண்ணியத்தை எப்பக் கண்ணி னாலே பார்ப்பமோ என்றும், தேவேந்திரனும் இந்திராணியும் போலே எப்ப நாம வனைக் கூடிப் பிழைப்பமென்று மனதிலே எண்ணாதெல்லாம் எண்ணி மதிமயங்கிவுடாங்கனை சோபிதங் கொள்ளப்பட்ட சம்பிரமை எப்படியென்றால்

## 22. தரு

தூங்கையில்கண்டதற்கா வுடாங்கனை என்னுஞ்
சித்திரம் சோக மாகினாள்
திருணியைத் துதிப்பாள் சோகமாகினாள்
திருணியைச் சாதிப்பாள் சோகமாகினாள்
வீணையை நாதிப்பாள் சோகமாகினாள்
முளைத்துச் சிலநாளாகி மழைத்தூரல்
காணாப்பயிர்போல் வாடினாள்
வினைக்கே புவியில் பெண்ணா செனிக்க ஆவாது
என்றெண்ணி
விதியை நொந்தாளே கவுரியை தினமதியான்

விதியை நொந்தாளே சுவுரியை துரைசாணி
விதியை நொந்தாளே பவானிக்குச் சமானி
விதியை நொந்தாளே
கதிரோன் இப்ப சென்மத்தில் நிகாரமென்று
தலைமேலதாய்
கரங்கள் வைத்தாளே மரைமலர் போலிரண்டு
கரங்கள் வைத்தாளே இருவிழிநீர் திரண்டு
கரங்கள் வைத்தாளே வெறுந்தரைமேல் பிண்டு
கரங்கள் வைத்தாளே
பிரியா வங்கணமாக மருவுஞ் சேவலைக் காணப்
பேடன்னம் போலே மின்னல் என ஒளிவானைப்
பேடன்னம் போலே
கனியொடும் இறைதின்னாப் பேடன்னம் போலே
மனதுலை மெழுகென்னப் பேடன்னம் போலே
நித்திய தவமிருந்து பெத்ததாய் தகப்பன்மேல்
நினைவில்லாமலே சொல்லிய சொல்லின் சாரம்
நினைவில்லாமலே அல்லொடு பகல் நேரம்
நினைவில்லாமலே தூங்கையில் கண்டதற்கா
உபாங்கனை சித்திரம் சோகமாகினாள்

## 23. விருத்தம்

இந்தவித மாயனைமேல் மயங்கி யதை
இந்திரவல்லி இந்திரகண்ணி யேக சூட்சி
பந்தடரி நீலவற்னியினும் அரூகை
பாங்கியர்கள் ஓடி வந்து பண்பாய்த் தாங்கி
சந்தனம் பன்னீர் தெளித்து விசிறி வீச
சலவை செய்ய சோகம் அது தணியாதாலே

எந்த விதத்தால் இதை நாம் தீர்ப்போமென்று
எண்ணங் கொண்டு பாங்கியர்கள் இயம்புவாரே

## வசனம்

இந்த பிரகாரமாகத்தானே தூங்கும் பஞ்சனையின் பேரிலே மயங்கிவீழ்ந்த உடாங்கனை பந்தடர்இட நீலவன்னி, இந்திரவல்லி, பஞ்சரபாணி, யேக சூட்சி பரிமளாங்கி பின்னும் அநேகம் பாங்கிமார்களும் கூடி ஓடி வந்து தாங்கிப் பிடித்துக்கொண்டும் சந்தனத்தெளிவை இறைக்கவும் பன்னீரைத்தெளிக்கவும் விசிறிகளாலே வீசவும் சோப மானது சற்றுந்தெளியாததினாலே பாங்கிமார்கள் பின்னும் அநேகவியாகூலம் பட்டுச் சொல்லுகிற மார்க்கம் எப்படி யென்றால்

## 24. தரு

உத்தம வடிவாம் உடாங்கனைத் தாயார்க்கு
இத்தனை சோகமும் ஏன் வந்தது அய்யோ அய்யோ
காணவும் அரிதான கயிலைக்குப் போனாளே
தோணி தாபுரிநோக்கி துரைசாணி வந்தாளே
வந்து மஞ்சனமீது மயில்எனவே சாய்ந்து
சிந்தை மகிழ்ந்து நித்திரை செய்யத்தொடங்கினாள்
செய்யு நித்திரைத் தெளிந்து திடுக்கென்று எழுந்திருந்து
மையிடுங் கண்கள்மாது திறந்தாளே கண்கள் திறந்து
என்னகாரணம் என்றாளே எண்ணாதும் எண்ணி
பின்னாளை போல் ஆனாளே, வஞ்சி மந்திரங்களற்ற
வீராதிவீரன் செய்த, வஞ்சகமோ என்று மனதிற்குறித்தாளே

சுரத லீலையில்சிக்கி சுகத்தை அனுபவித்து
பருவந்தனை இழந்த பாவனை ஆனாளே
விழிகள் இரண்டையும் விரவித் துதிக்கு முன்னே
ஒழிய வருமோ என்று ஓங்கின் அரைத்தாளே
உள்முலைமெழுகாக உருகிச் சோகமிகுந்து
மலரணைமேல் சாய்ந்த மார்க்கந்தான் என்னமோ
தாங்கத்தாங்க கேசம் வாங்கிக் குனியுதே
தீங்காகவே நடுசிரசு கொதிக்குதே
எள்ளளவுவித துயர் எங்கட்கு தெரியவில்லை
மெள்ள மெள்ள கண்கள் மூடித்திறப்பதேன்
சந்திரன்மீது முகில் சாடுவதே போலக்
கந்தத்துள்ளுமுக சாந்தி நுழையுதே

தண்ணீர் தயைகன்ற தாமரைப் போலவே
உண்பதைவிட்டு உடலும் உலருதே
செயதுரை தான்இந்தத் தீங்கைக் காதினில் கேட்டால்
உயிர்ச்சேதம் வந்திடும் உடனேதான் அய்யோ
அகிலத்தில் விதம்பர காரமுமோகுது
சகி சித்திரலேகையும் தான் வரக்காணமே

## 25. விருத்தம்

தாங்கலால் தழுவலாலும் சலவையால் விசிறியாலும்
நீங்கலாது இருக்குஞ்சோகம் நீங்கியே நலமதாகப்
பாங்குவேறு அறியோமென்று பாங்கியர்தவிக்கும்போது
தீங்கிலா வடிவம் போன்ற சித்திரலேகையும் வந்தாளே

## வசனம்

ஆஆஆ எப்படியென்றால் சோகமாகி விழுந்த வாணாசூரன் குலக்கொழுந்தாகிய உடாங்கனையைத் தாங்கினாலும் சந்தனங்களைக் கரைத்து இறைத்த போதிலும் பன்னீரைத் தெளித்தபோதிலும் ஆலவட்டங்களி னாலே வீசினபோதிலும் சோபிதமானது சற்றுந் தெளிய வில்லையே இந்த சமாச்சாரம் வாணாசூரன் காதிலே கேட்டால் நம்மளுக்கெல்லாம் சிரசாக்கினை வந்திடு மென்று சிரசாக்கினை வந்திடுமென்று சித்திரலேகையை இன்னம் வரக்காணமே என்று பாங்கிமார்கள் எண்ணாத எல்லாம்எல்லாம் அநேகம் வியாகூலப்பட்டுக்கொண்டு இருக்கிறவேளையிலே சித்திரலேகை வருகிற சம்பிரதாயம் எப்படியென்றால்

## 26. தரு

வந்தனள் சகி சித்திரலேகையே - ககனவிஞ்சை
மந்திரதந்திரம் பாராட்டுந்தோகையே
இந்திர நகருக்கு தான்துணைபோகும் குபேரனான
சந்திர நகருக்குத்தான் இணையாகும்
வாணாசூரனாம்
இறைவன் தோணிதபுரியின் வீதியின்
சுரதமா தொழி விரதி போலவே

இர்தகிடா தரதிமி இர்தகிடா தாமென
இர்தகிடா தோதிமி இர்தகிடா தோமென
(வந்தனள் சகி சித்திரலேகையே)

மோரை எழிலைச் சந்திரன் பார்க்கவே நடந்துவந்து
தாரை எழிலை அன்னங்கள் கார்க்கவே திரேகச்சு
சுடராம் பேரெழிலுக்கே காரணங்கள் தோற்கவே
வார்த்தைகள் பேசும்
சீரெழிலைக் கிளியினங்கள் ஏற்கவே
பூபாலர் மெச்ச சித்திர வேலை நன்றாய்த் தெரிந்தாள்
மித்திர பேதகத்து ஒத்திருந்தாள்

தத்தம் ததி திரு தாகிர்த்இட தாமென
தித்திர திகுதிகு திங்கிர தகிடதோமென
(வந்தனள் சகி சித்திரலேகையே)

மெட்டுப் பீலி விரலின் உண்ணவே- பிடி இடையில்
கட்டுஞ்சேலை நிக நெகென்னவே பன்னிரண்டுவரிசை
அட்டிகை கழுத்தில் மின்னவே - நுதலில் சொற்ன
சுட்டியுந்தள தளென்னவே - கண்களைத் தீட்டி
சொர்க்கமான கலவைப் பூசிக்காந்தங்கள் நன்றாகப் பேசி
தக்குதகு திருதாகிர்த இடாதா மென
தொக்குத் திகுதகுதோ கிர்தகிடதோ மென
(வந்தனள் சகி சித்திரலேகையே)

நடையொடும் தங்கவடங்கள ஆடவே - மாமபின்னாள் ஆளள்
சடையொடு நாகபடங்கள் ஆடவே - மின்னாளை வென்ற
உடலொடுங் கொங்கைக்குடங்கள் ஆடவே - பேசிய சிந்த
மிடறொடும் முத்துவடங்கள் ஆடவே
ஒய்யாரி இவள் நெற்றிமீது திலகம் பளீர் பளீரென
பாத சலங்கைகள் கலீர் கலீரென

தய்யா தோம் கீர்தகிட தாவென
தய்யா தேதேம் கிர்தகிடதோவென
வந்தனள் சித்திரலேகையே ககனவிஞ்சை
மந்திர தந்திரம் பாராட்டுந் தோகையே

## 27. விருத்தம்

தேட்டமாய்ச் சொன்னவேலை
செய்யும் பாங்கியரே கேளீர்
தாஷ்டிக மிகுந்த இத்உடாங்கனைத் தாயாளிப்போ
மேட்டிமை குறைந்தது ஏனோ மெய்தளர்ந்து
ஓய்ந்தது ஏனோ
நாட்டமே சோர்ந்தது ஏனோ நமக்குநீர் உரை செய்வீரே

## வசனம்

அகோ கேளுங்கோ தாதிப் பெண்களே மகா தைரிய சாலி உடாங்கனை இத்தமைதி மயக்கம் வந்த வரலாறும் எனக்கு உண்மையாகத் தெரியச் சொல்லுங்கோ பெண்களே

## 28. விருத்தம்

மந்திர தந்திரங்கற்று உணர்ந்தாயே நாங்கள்
மலர் எடுத்து மண்டபத்துள் வருகும் போது
சந்திரனேநீ ஒழியலாமோ வென்று
சொல்லி நம்ம தாய்அதிக சோகங்கொண்டாள்
சிந்தை களுங்கலங்கி அம்மை திரேகந்தன்னைச்
சீக்கிரத்தில்தாங்கி மிகுஞ்சலவை செய்தோம்
நிந்தையெனுஞ் சோபிதமு நீங்காதாலே
நீவரக் காணமென்று நினைந்திட்டோமே.

## வசனம்

ஆஆ கேளுமம்மா தாயே, மந்திரதந்திரத்துக்கு வல்லவளாய் இருக்கப்பட்ட சித்திரலேகையே நாங்கள் புஷ்பசாதிகள் எடுத்துக்கொண்டு வந்து மண்டபத்துள் உள்ளூர வாரபோது உடாங்கனைத் தாயானவள் தனக்குத் தானே சொல்லிக்கொண்டு கண்திறக்கிறதற்கு முன்னே எழியலாமோ திருடா என்றும் சாமியென்றும் மதிமயங்கிச் சோகமானாள் நாங்கள் சீக்கிரமாய்ப் போய்ச் சோபித மானவளைத் தாங்கிப் பிடித்து உடம்பைச் சலவை செய்து பார்த்தோம்.

சோகம் தீராததினாலே என்ன அநியாயம் என்று நாங்களும் மனங்கலங்கி உன்னை வரக்காணம் என்று நினைத்தோம். இவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும். அம்மா சித்திரலேகா.

இப்படிச் சொன்ன பாங்கியரைப் பார்த்து சித்திரலேகை சொல்லுகிறது எப்படியென்றால்

## 29. சிங்காரப் பத்தியம்

சகிமாரே நம்மளுடதாய் உடாங்கனை மாது
மிகவும் சோகமானவிதம் ஏதெனில்
வாசுதேவன் சேயன் மனவஞ்சமிது வல்ல
ஈசுரன்தான் செய்தப் பிசகு இதல்ல
அம்பிகை செய்திட்ட அநியாயம் இதுவல்ல
பிரமதேவன் செய்த பிசகு இதல்ல
விண்ணோர்கள் தான்செய்த வித்தியாசம் இதுவல்ல
மண்ணாள் அசுரர்செய்த வஞ்சமல்ல

துன்மதியினார்கள் செய் தொழிலுமல்ல
கன்ம நோயல்ல இது காச்சல்அல்ல
சென்மம் அதை மாய்த்திடும் செய்கையல்ல
மன்மதன் செய்திட்ட வஞ்சமிதுவே

## வசனம்

ஆஆ கேளுங்கோ பாங்கிப் பெண்களே நம்ம துரைசாணிக்கு வந்த மயக்கத்தைக் கூர்ந்து பார்த்தால் பிரம்மா, விஷ்ணு, ருத்திரராலும், அசுரராலும், அரக்கராலும், மந்திரவாதிகளாலும் வந்தவினையுமல்ல. கர்மநோயல்ல காசலல்ல. பிராணனைக் கொண்டுப் போகவந்த நோயல்ல மதனராசன் செய்த தோதகத்தாலே வினையெல்லாமல் வேரே வினையல்லடி பாங்கிமாரே.

அப்படிக்கு வோரொருவராலே வந்த வினையாகி னாலும் மன்மதன் செய்த கபடனாகிலும் நான் அவ்விதத்தில் ஆகிலும் உடாங்கனை அம்மாள் மயக்கத்தைத் தீர்த்து சவுக்கியம் செய்துபோடுறேன் நீங்கள் அனுதினம் காலம் செய்யப்பட்டதை அதி சாக்கிரதையாய்ப் பாருங்களடி பாங்கியரே.

அப்படியே போகிறோம். அம்மா சித்திரலேகா..

## 30. விருத்தம்

பலபல வேலைக்காக பாங்கியர் தன்னையேவி
மலரணைமீது சாய்ந்து மயங்கிய மாதைப் பார்த்து
கலமேயாய் ஆய்ந்து பார்க்க காமன் செய்கலமென்று எண்ணிச்
சிலைநுதல் சித்திரலேகை திட்டியைக் கழித்திட்டாளே

## வசனம்

ஆஆ எப்படியென்றால் சித்திரலேகை பாங்கிமார் களுக்கெல்லாம் வேலை சொல்லியனுப்பிப்போட்டு உடாங்கனை மயக்கத்தைப் பின்னையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்து மன்மத வாதைத்தானென்று நிச்சயித்து உடாங்கனைக்குச் சித்திரலேகை திட்டிக்கழிக்கப்பட்ட சம்பிரதாயம்யெப்படியென்றால்,

## 31. தரு

திட்டிக்கழித்தனள் சித்திரலேகை தெய்வ
மேனகைக்கு இணையாந் தோகை
அஷ்டதிக்குப் பாலர்களைத் துதித்தும்
ஆகாசம் பூமிதனையுந் துதித்தும்
அரிஅரன்அயன் இவர்களைத் துதித்தும்
இருஇரவியோடு இருநான்கையுந் துதித்தும்
இருவரதினொடு ஏழையுந் துதித்தும்
சுரரொடு முனிவர்களையுந் துதித்தும்
அனலாங்கொழுந் தங்கையிலேந்தியே
குணசாலி உடாங்கனைக் கொடிக்குத்
(திட்டிக் கழித்தனள்)பழைய
கூரைத்து இல் லொன்று சேரை
பாரிலவால் தொங்கள் தான் இரண்டு சேரை
முளைகாய் என்பது மூன்று சேரை
மூதிக்குவீதி மண் நான்கு சேரை
முறையாய் இந்த மூன்றையும் ஒன்றையுந்துரை
சாணியும்

முகந்தலைவொடு சூழ்ந்தாம் வலம் இடம்
சுந்தியே ஒரு யேத்தாம் இடம் வலம் சுத்தியே
பத்தியெரிந்திடு தடின்மிசை யினில்
வைத்ததினள் புகை எங்கும் விளைந்திட
(திட்டி கழித்தனள்)
கள்ளியென்று இவளைச் சொல்லும் பேர்
கண் கைகால் ஆர்ந்திட நினைக்கும்பேர்
கண் இவள் தெள்ளிமையை நிந்தித்த பேர்
கண்இவள் செய்யும் வேலை பொய்யென்ற பேர்
கண் சிரந்தோட தேவரும் செய்திடும் அலர்
கண்உடர் தொடர் மனதுருகிடும் அவர்காண்
கரந்தொடாத் தினம் கருதிடும் அவர்கண்
நிரந் தொடாநெஞ்சில் நினைத்திடும் அவர்கண்
கருவழிந்தஇந்தக் கனல்கள் யெல்லாம்
சொன்னல்
பொரிபொரிந்தடும் போலவும் போமென
(திட்டிகழித்தனள்)
அங்கஷனா நீ யுள் நாடாதே
ஐந்தில் நீ யொன்றும் தேடாதே
திங்களே நீ வந்து ஆடாதே
தென்றலே நீ வந்து சூடாதே
செங்கதிரேநீ வெருகாதே
தகவங்கலியே நீ வெருகாதே
புங்கவனேநீ வெருகாதே
சங்கரியே நீ வெருகாதே
அல்லாத விரோதநீ வேளைக்கு
நல்லோர் எனவேபுகழ்ந் தோதியே

திட்டிக்கழிந்தனள் சித்திரலேகை - தெய்வ
மேனகைக் கிணையாந் தோகை.

## 32. விருத்தம்

சூட்ச சகிமந்திரத்தை சோபித்தே அப்பால்
சூரன்மகள் தனையணைமேல் சுமந்தே வைத்து
பூச்சொரிந்து மேனியெங்கும் பன்னீர் தாக்கி
பொற் பனமாய் விசிறியிசை ஓடும்போது
மூச்சுவிசை கொண்டெழும்பிச் சோகந்தீர்ந்தே
மூடியகண்திறந்து எழுந்தாள் முகத்தைப் பார்த்து
ஆச்சரியம் என்றுடன்சொல் தாயே யென்று
அடிபணிந்து மந்திரமகள் அரைகுவாளே

## வசனம்

இந்தப்பிரகாதமாக மந்திரத்தைச் செபித்து புட்பசாதி களுடைய விசத்தையெல்லாம் நீக்கி உடாங்கனையைப் பஞ்சணையின் பேரிலே எடுத்து வைத்து புட்பசாதிகளை மேலே இறைத்தும் பன்னீர் கலவைகளைத் தெளித்தும் சயிலமாக விசிறியினாலே வீசுகிறபோது உடாங்கனை மயக்கந்தெளிந்து எழுந்து கண்திறந்து பார்க்கும்போது சித்திரலேகை உடாங்கனையைப் பார்த்து நமஸ்காரம் பண்ணிக் கேழ்க்கப்பட்ட சம்பாஷனை வந்தனை எப்படியென்றால்

## 33. தரு

என்னமாய்த்துயரம் இது எந்தவிதத்தினால்
வந்ததம்மா
மன்னன் வாணாசுர ராசன் பெற்ற மாங்குயிலே
பேசும் பூங்கிளியே
அன்ன நடையாளே தாயே அந்தந்ததோர்க்கு
துரந்தரமே
மின்னல் இடையோளே வீணைமீட்டு உடாங்கனை
தாஷ்டிகமே
கோதி முடிந்தக் கொண்டை குலைந்ததுவும் பின்
கலைந்ததுவும்
பாதிப்பிறைநுதல் இப் பதுங்கிதத்தில்
அதமொதுங்கினதேன்
சோதியெனும்விழிகள் சுருங்கினதேன்
சோர்ந் துறங்கினதேன்
காதுங் கேளாதது வேன் - இரு
கன்னத்தின் மேற்கண்ணீர் மின்னினதேன்
வாய்நாவும் சுக்கது போல்
வரண்டதுவேன் - பின் - இருண்டது ஏன்
சாயாத இளங்கமுகம் வாடிச்
சாய்ந்தது ஏன் மங்கி ஓய்ந்ததுவேன்
மாய்வரேபோல் நெஞ்சந் தன்னில்
மதித்ததுவேன் பின் - கொதித்தது ஏன்
தோயாத மேனிரண்டும் சற்றே
தேய்ந்தது ஏன் முனை சாய்ந்தது ஏன்

புயங்கள் இரண்டினிலேப் பூரிப்
பில்லாததேன் - சேவை நில்லாததேன்
நயனங்கள் தொடும் வலக்கை தலைக்கு
நாட்டினதேன் விரல் கூட்டினதேன்
சுயங்கள் தொடும் இடக்கை அங்கை
துடைக்கிட்டதேன் - ரம்ப மடைக்கிட்டதேன்

கையும் காலும் முடங்கி உடல்
களைத்ததுவேன் பின் இளைத்ததுவேன்
நிசமா இரண்டன்னையு - நெளிந்ததுவேன்
பின்குழைந்தது வேன்
அசையாத கோரன் காலை
அவிழ்ந்தது ஏன் - மெய் கவிழ்ந்ததுவேன்
சீதரா தமாதம் ரெண்டும்
சிறுத்ததுவேன் - விறு - விறுத்ததுவேன்
விதியாகவே உள்ளங்கால் ரொம்ப
வெட்கினதும் விரல் சொட்கினதும்
ஆடைஆபரணங்கள் மேல்இச்சை
ஆகாததும் துயர் போகாததும்
சோடினையாய்க் குழல் கரு மலர்
சூடாததும் - பகடை ஆடாததும்
மேடையின் மேலிருந்து வீணை
மீட்டாததும் சுதி கூட்டாததும்
வாடைகலவைகளை
வருந்தாததும் சொல் பொருந்தாததும்
பேசுங்கிளிகளுடன் நீதான்
பேசாததும் - பன்னீர் பூசாததும்

பாஷையீர் ஒன்பதிலும் பதம்
பாடாததும் - விளை - யாடாததும்
வாசப்பல்லாக்கிலே சவாரி
வருகாததும் தாம் தருகாததும்
தேசிகன் மேலிருந்து நடனஞ்
செய்யாதது - மலர் - பெய்யாததும்
இஷ்டாங்கரமென்னுஞ் - சுகமன்னாதனேன்
நத்துமன்னன் உண்ணாததேன்
பட்டாங்க மாசக்கண்ணால் எனைப்
பார்த்ததுவும் பதில்கூ டார்த்ததுவும்
கொட்டாவியிட்டதுவும் சொற்கைக்
கொண்டதுவும் தயிரியம் விண்டதுவும்
திட்டமுடன் எனக்கு இது தெரியச்
சொல்லும் - எல்லாம் அறியச் - சொல்லும்

## வசனம்

அகோகேளும்மா தாயே உடாங்கனையே உனக்கு இத்தனை மதிமயக்கம் வந்த வரலாறு தெரியச் சொல்லு மம்மா தாயே...

***சித்திரலேகை சொல்லும் :***

## 34. விருத்தம் :

அன்னமே குயிலே தேனே
அரிவையர்க் கரசே மானே
உன்னிடதுயரமெல்லாம் ஒளியாமல் எந்தனோடே
பன்னியே உரைத்ததால் நல்ல பாக்கியம்
பெறுவாயென்று

சொன்னதோர் சகியைப்பார்த்து சூரன்சேய்
உரைக்கின்றாளே.

## வசனம்

இந்தப்படியாகக் கேட்ட சித்திரலேகையைப் பார்த்து உடாங்கனை சொல்லுவாள்.

அகோகேளும் பெண்ணே சித்திலேகா. நான் ஒன்றும் அறிய மாட்டேன் பெண்ணே!

## 35. விருத்தம்

பழுத்த முழுப் பூசனிக்காய் சோத்தில் தானே
பதித்திருந்தும் தொழில் எனக்குப் படினமம்மா
முழித்திருக்க முண்டாம் அதை வாங்கவல்லாள்
மூண்டகனல்தனில் முழுகவல்லாள் முன்னே
எழுத்தை நொந்து சோர்ந்தமுத விதத்தைத்தானே
எள்ளளவும் சொல்லாமல் இருதயத்தில்
ஒளித்திருந்தால் சிறுமையல்லால் பெருமையில்லை
உற்றது சொன்னால்அற்றது ஒட்டுந்தாயே

## வசனம்

அகோவாரும்மா தாயே உடாங்கனையே முழு பூசணிக்காயைச் சோத்திலே மறைக்கப்பட்ட தொழில் எனக்கும் படினந்தானம்மா. மேலும் வுற்றது முழுத்திருக்க முண்டலாங்குவேன். வடவாக்கினியிலேயும் முழுகி வாத தோற்றிடுவேன். இத்தனை சாமர்த்தியமுள்ள சகி முன்னாக நீ சோபிதங் கொண்ட வரலாறு சொல்லல் ஆகாதென்று ஒளித்ததேயானால் சிறுமை வருமேயல்லாமல் பெருமை

வருகிறதில்லை. மேலும் உற்றது சொன்னால் அற்றது பொருந்துமென்பது நிச்சயம் ஆனதினாலே நீ உள்ள காரியத்தை ஒளியாமல் சொல்லுமம்மா தாயே.

இப்படிச்சொன்ன சித்திரலேகையைப் பார்த்து உடாங்கனை சொல்லுகிற மார்க்கம் எப்படியென்றால் :-

## 36. தரு

எந்தவிதம் இத்துயர் நீங்கினான் உன்னோடே
என்னென்று சொல்லுவேன் பாங்கி
அந்தமும் விந்தையும் ஓடிப்போனதல்லாமல்
சந்திரமுகமும் வாடி எந்தன்
விந்து வீனில் ஒடைந்து போகுது
சந்த சந்து குடைந்து நோகுது
(எந்தவிதம் இத்துயர் நீங்கினான் உன்னோடே)
பூவெனும் பாணங்களாலே - குயிலினங்கள்
கூவிடுந் சத்தங்களாலே திரேகம் நடுங்கிப்
பாவி நான் எனதாவி சிறிது
நாவும் உலருது சாவுகோருது.
(எந்தவிதம் இத்துயர் நீங்கி)

ஊருமே பகையுமாக யெந்தனிட
பேருமே பகையுமாக இனிமையாள்
நீருஇனிக்குது மோரு துவக்குது
சாறு கசக்குது சோறுபகைக்குது
(யெந்தவித)
துஷ்டருக் கதிகதாகம் செய்விக்கு மோகம்
மட்டியில்லா தடர்ந்ததிரேகம் தன்னுள்ள சிவன்
பொட்டிபாம்பென எட்டி நோக்குது

தொட்டகாரியம் நஷ்ட மாகுது
எந்தவிதம் இத்துயிர் நீங்கினான் உன்னோடே
என்னென்று சொல்லுவேன் பாங்கி.

## வசனம்

அகோ வாரும் பெண்ணே பிராணசகியான சித்திரலேகா என்னுடைய சரீரம் மிகவும் நோகுது பிராணன் ஆனது கூடு விட்டுப்போவோம் என்று பதறுது. வாயுலர்ந்து போகுது மனது நடுங்குது சோறு கசக்குது இத்தனை விதஞ் செய்யப்பட்ட துயரத்தை நானென்னவென்று உன்னோடே சொல்லுவேன் அம்மா சித்திரலேகா.

இப்படிச்சொன்ன உடாங்கனையைப் பார்த்து சித்திர லேகை கேட்கப்பட்ட சம்பிரதாயம் எப்படியென்றால் :-

## 37. விருத்தம்

மாவலி வாணநின்றான் மைந்தனார் மகளே கேளாய்
நோவு நோக்காடதாகில் நொடியினில் தீர்ப்பேன் மித்திரர்
ஏவிய சூனியமாகில் சாதிணந்தனில் தீர்ப்பேன்
சீவனுக் கழுத்தியில்லாச் செய்கைநான்
செய்வேன் கண்ணே.

## வசனம்

அகோ கேளுமம்மாதாயே வாணாசூரன் குலக் கொழுந்தே உனக்கு வந்த துன்பம் நோவு நோக்காட்டில் எடுத்த கூறினால் ஒரு நொடிக்குள்ளே அவ்விடத்தினாலே தீர்த்துப் போகுறேன். மித்திரர் செய்த பில்லி சூனியத்தி

னாலே வந்த கூறாகில் அதைநான் இமைப்பொழுதிலே மந்திரத்தினாலே தூள்ப்படுத்துவேன் எந்தவிதத்தினால் எடுத்த கூறானாலும் உன் சீவனுக்கு பழுதில்லாமல் காக்க நான் இருக்க உனக்கு பயம் வேண்டியதில்லை ஆன படியினாலே உள்ளது சொல்லுமம்மா தாயே.

## 38. உடாங்கனை சொல் விருத்தம்

இப்பி சாஸ்திரத்தின் மேரை சித்திரமெழுதும் பாங்கி
வெப்பு நோய் நோக்காடு என்னும்
வேதனைத்துயரமல்ல
சப்பிரமஞ்சனத்தில் ராத்திரிசயனித்துத் தூங்கும்போது
சொற்பனங்கண்டதால் இத்துயரந்தான்
கொண்டேனம்மா

### வசனம்

அகோ கேளும் பெண்ணே சித்திரலேகா எனக்கு வந்த துயரம் நோவுநோக்காட்டினாலே வந்ததல்ல வெப்புக்கடுப்பு சூனியமல்ல. நான் ராத்திரி சப்பிரமஞ்சனத்தின் பேரிலே படுத்து நித்திரை பண்ணுகிறபோது ஒரு அதிசயமான சொற்பனங்கண்டேன் ஆகையிலே இந்த சோகை கொண்டேனடி பாங்கி.

ஆனால், நீ கண்ட சொற்பனம் ரொம்பவும் அதிசயமா யிருந்தால் அதையெனக்கு வகை விவரமாகத் தெரியச் சொல்லுமம்மா தாயே...

## 39. உடாங்கனை சொல்லப்பட்ட

### தரு

வந்தான் வந்தா னம்மா - சகியே
ஒரு ராச குமாரன்
வந்தான் வந்தானம்மா சகியே
சிந்தை மகிழ்ந்து நித்திரை செய்யும்போது கினாவில்
தேசதேசர் புகழ்ந்திடும் ராசராசர் புகழ்ராச திலகன் என
(வந்தான் வந்தானம்மா சகியே)
வித்தாரச் சகியே ராத்திரி வேளை எந்தன் கினாவில்
வேதசாஸ்திரங்களை வேண்டி உணர்ந்திடு மாதா
கண்டு, புகழ் மதனராசன் எனை
(வந்தான்)
இந்திரசாலச் சகியே எந்தன் கினாவில் ராத்திரி
இஷ்டமுடன் உலகில் யாவரும் வருந்திய
அஷ்டலட்சுமிகள் அழகு திலகன் எனை
(வந்தான் வந்தானம்மா சகியே)
சித்திரலேகா ராத்திரி நித்திரை செய்யக்கினாவில்
தேவிலாத புகழ் தேடிவழங்கிய
தேவதேவர்புகழ் தேவர்திலகனென
வந்தான் வந்தானம்மா சகியே - ஒரு ராசகுமாரன்
வந்தான் வந்தானம்மா சகியே.

### வசனம்

அகோ கேளும் பாங்கி என்னுடைய கனாவிலே ஒரு ராசகுமாரன் வந்தான் அவனைப் பார்த்து இத்தனை சோபிதங் கொண்டேனடி பாங்கி

இப்படிச் சொன்ன உடாங்கனையைப் பார்த்து சித்திரலேகை சொல்லப்பட்ட சம்பிரதாயம் எப்படியென்றால்.

## 40. விருத்தம்

அன்னையே வாணாசூர அருந்தவக் கொழுந்தே
கேளாய்
என்னையோசனை செய்தாய் என்மனது ஏற்கவில்லை
இன்னவன் இனியாவனென்ற ஏற்பாடு தெரிந்திடாத
மன்னனைக்கனவில் கண்டு மயங்கல்
பெண்மதித்தானம்மா

## வசனம்

அகோகேளும் அம்மா என்னயோசனை இருக்க என்ன யோசனை பண்ணினாய் இந்த யோசனை என் மனதுக்கு ஏற்கவில்லை. மேலும் இன்னான் இனியான் என்றுருப் பில்லாத படிக்கி கனாவில் வந்த ராசகுமாரனுக்காக ஆசைப்பட்டு மதி மதிமயங்கினது நியாயமல்லவம்மா தாயே...

இப்படிச் சொன்ன சித்திரலேகையைப் பார்த்து உடாங்கனை சொல்லுகிற மார்க்கம் எப்படியென்றால் :-

ஆ.ஆ. கேளும் பாங்கி ராசராசர்களும் மெச்சத்தக்கின் ராசகுமாரன் அழகுயர்க் காணதினாலே பார்த்து மதி மயங்கினேன். ஆனதினாலே அவனுடைய அழகைச் சொல்லி வருகிறேன் சித்திரலேகா அப்படியே சொல்லி வாரும்மா தாயே

# 41. தரு

மகராசனாற் கண்டு மெச்சிய பூபாலனேயே யம்மா
மன்மதரூபிலும் அதிகரூபனே யேயம்மா
கமலாசன் என்றும் வேதனேசகியே மெச்சுங்
கமலமலர் போலவும் பொற்பாதனே சகியே
மச்சங்களைப் போலுங்கெண்டைக் கால்
உளோனம்மா அவன்

மாயவர்க்கும் அதிகமால் உள்ளோனம்மா
அச்சுவமுகம் போல் முழந்தாள் உள்ளோ னம்மா அவன்
அன்னையில் என்றேஞ் சித்திரவால்உள் ளோனம்மா
கரிகரத்தத்தானே வெல்லும் துடையுள்ளோன் பாங்கி
அவன்

காறகத்தின் துடியை வெல்லுந்துடி உள்ளோன் பாங்கி
நிரைநீதி இல்லாயிடம்போய்ச் சந்தியான் பாங்கி அவன்
நீர்ச்சுழியை வெல்லு திருவுந்தியான் பாங்கி
அமுதமனத வெல்லும் சொல்லும் நயத்தினானம்மா
அவன்

ஆல்இலையையே வென்றிடும் வயத்தினானம்மா
கழுகுதனை வென்றிடும் கழுத்தினான் பாங்கி நல்ல
கன்னல்தனை வென்றிடும் வழுத்தினான் பாங்கி
உடுக்கையும் இடைக்குநிகர் ஒல்லாது பாங்கி - அவன்
உடம்பைத்தானே மோந்து பார்த்தால் ஐவ்வாது பாங்கி
அடுக்கின்ற வார்த்தைகள் தன்னை சொல்லேனா னம்மா
அவன்

அரம்பைஇலைத் தன்னை வெல்லு முதுகுதானம்மா
பார்த்தனுக்கு நிகரான மார்பனே சகி - அவன்

பத்தினிமார்க்கு இன்பமான சுருபனே - சகி
மேர் தனக்குநிகரான தோளனே யம்மா - அம்மா
வேத சாஸ்திரமதிற் றயாள னேயம்மா
கறுநீல முகிலைப் போலும் மெய்யனேபாங்கி - அவன்
கமலமலர் தன்னை வெல்லும் கையனே பாங்கி
மரைமலர்கள் தன்னை வெல்லும் நயனனே சகி அவன்
வாகுடன் சிவந்தகனி வாயனே - சகி
தாளங்களைத் தானே வெல்லுங் கையினான் பாங்கி -
மெச்ச
வளங்களைத் தானே வெல்லுஞ் சிகையினான் பாங்கி
திரளாகவே தான் சிவந்த நாக்கினான் சற்றுந்
தீங்கில்லா தெள்மலரை வெல்லும் மூக்கினான் பாங்கி
கதிரவன் தன்னை வெல் முகத்தினானம்மா - அவன்
கண்ணாடிகள் தன்னைவெல் கன்னத்தினானம்மா
வதுவை செய்ய முறைமைகளை ஓதுவான் சகியே -
அவன்
வள்ளைக் கொடிதன்னை வெல்லு கரத்தினான் - சகியே
நவரத்தினக்கிரீடந் தன்னையே சூட்டினான் சகியே -
விஷ்ணு
நாமத்தை நுதலில் நன்றாய்த் தீட்டினான் சகியே
கவசகுண்டலங்கள் காதில் தொட்டனன் பாங்கி -அவன்
கன்னத்தின் மேல் திட்டியாம் பொட்டுஇட்டனன் பாங்கி
கண்களுக்கு நீலமையைத் தீட்டினான் பாங்கி -
கழுத்தில்
கதிர்ச்சுடரை வெல்லுநகை பூட்டினான் பாங்கி
பங்கைப்பூ அங்கிதன்னை தொட்டனன் சகியே - அவன்

பச்சவடங்கள் கட்டிச்சுங்கு விட்டனன் சகியே
ஏறுரத்தில் முன்னால் நன்றாய் போட்டனன் பாங்கி
அவன்
இடையில்அறை ஞாண் நன்றாய்ப் பூட்டினான் பாங்கி
காரு மின்னல்போலுங் கச்சை அணிந்தனன் பாங்கி
அவன்
காலினிற் சொற்ன கேசங்கள் புனைந்தனன் பாங்கி
அவன்
சகரந்தப் பழைமைகளை பேசுவான் சகி - சாந்து
சவ்வாதுகளைப் பூசுவான் சகி
மிக்க வாசமாமலர்ச்சூடுவான்சகி சித்திர
வித்தாரக் கவிதைகளைப் பாடுவான் சகி
சுந்தரத்தை ஒன்றிரண்டாய் சொன்னனேபாங்கி சற்றும்
சோராமல்அவர் அழகு சொல்லவே பாங்கி
அந்தரமோடு இப்புவியைத் தாங்குவோன் பாங்கி அந்த
ஆதிசேஷன்வாய்களினால் முடியாது பாங்கி
கண்ணஈரா யிரத்தோன் வாயால் சொல்லாதாச் சகியே -
அவன்
கட்டழகை யார்தான் சொல்ல முடியுமோ சகியே
பெண்சென்ம மாய்ப்பிறந்தால் ஒருவாயால் சகியே
- அவன்
பேரழகை என்னவென்று பேசுவேன் சகியே.

## 42. விருத்தம்

அஷ்டதிக் கெல்லாந்தாங்கு ஆயிரவாயோன் என்னால்
கட்டழக தனைத்தானே கழறவு முடியாதப்பால்
மட்டில்லாப் புகழ்ச்சியோடு என் மனமதுக் கேற்கத்தானே
இஷ்டமே கொடுத்தபங்கை என்னென்று சொல்வேன்

பாங்கி

## வசனம்

ஆ ஆ கேளும் பெண்ணே சித்திரலேகா கனாவிலே வந்தவனுடைய ரூபலாவண்ணியத்தை ஒன்றுவிட்டு ஒன்று சொன்னனே யல்லாமல் சரிவரச் சொல்லவில்லை சரிவரச் சொல்ல வேணுமேயானால், ஆதிசேடனுடைய ஆயிரம் வாய்களாலும் சொல்லிமுடியப் போகாது ஆனதினாலே நான் சொல்ல முடியாது முடியாது.

மேலும் என்னுடைய மனது மெச்சும்படியாக அர்கை இஷ்டத்தைக் கொடுத்தப் பணிக்கையை நான் என்னென்று சொல்வேன் அம்மா சித்திரலேகா :-

இப்படிச் சொன்ன உடாங்கனையைப் பார்த்து உடாங்கனையே அகோவாருமம்மா தாயே உடாங்கனையே உன்னுடைய கனாவிலே உனக்கு ராஜகுமாரன் கொடுத்த இஷ்டத்தை என்னோடே வகை விவரமாக சொல்லு மம்மாதாயே.

## 43. தரு

சொல்ல முடியாதஇந்த சுகம் சுமந்தோன்வாயால்
அந்தசுகம்
சல்லாப சங்கீத சற்குணம் தானேயுள்ளவன்
பொய்துற்குணம் தன்னைத்தானே தள்ளும்
சட்டம் படித்ததை என்னத்தான் சைக்கொண்டு
இஷ்டங் கொடுத்ததை சொல்ல முடியாதிந்த
சரசசம்பிரமதீரன் சமரை வென்றிடுஞ்சூரன்
அரசர திலபகாரன் அவனிபுகழ் கம்பீரன்
சரசமதனில் மார்பன் துலங்கும் வச்சிரசரீரன்
மறைநான்கின் அனுசாரன் மாதர்புகழ் சிங்காரன்
மன்மதன் போலவே வந்திடுந் திட்டத்தை
சன்மதி யாகவே தந்திடும் இஷ்டத்தை
(சொல்ல முடியாத இந்த சுகம்)
இருவர் ஒருப்படவே இதழ்கள் காயப்படவே
விரகம் பொடிப்படவே வெயர்நீர் புறப்படவே
உரமுஞ் சலிப்பிடவே உடலும் நெகிழ்ப்படவே
சுரதம் சரிப்படவே துகில்கள் குலைப்படவே
மருவவே மோகன மந்திரஞ் செபித்ததே
சுரரும் புகழவே சுந்திரலபித்ததை
(சொல்ல முடியாத இந்த)
நளின கொங்கைகள் இரண்டும் நாம்பிடித்துக்கொண்டு
இளனிச் சாறுதுவண்டுயிருக்கும் இதழ்நீருண்டு
மெழுகித் தருககண்டு விரும்பியிருந்துக் கொண்டு
செழுமைக்குகந்த பெண்டுந் திரேகந் தழுவிக்கொண்டு

செப்பரிதாகிய சித்தாடும் வேலையை
முப்போகம் செய் தவன் முத்தா டுலீலையை
(சொல்ல முடியாத இந்த சுகம்
சுமந்தோன் வாயால் அந்த சுகம்)

## வசனம்

அகோ கேளும் பெண்ணே சித்திரலேகா ஆயிரம் நாவு படைத்த ஆதிசேடனாலேயும் ஒருபோகத்தினுடைய திட்டத்தை இன்னதென்று சொல்லமாட்டார். நான் ஒரு நாவு படைத்தவன் முப்போகத்தினுடைய திட்டத்தை வர்ணிக்க என்னால் ஆகாதம்மா சித்திரலேகா

இப்படிச் சொன்ன உடாங்கனையைப் பார்த்து சித்திரலேகை சொல்லப்பட்ட சம்பிரதாயம் எப்படி யென்றால் :-

## 44. விருத்தம்

கவின்அதனை ஒன்றிரண்டாய் உரைத்தாய்அப்பால்
கவ்வி சொல்லக் கடிண மென்று கருதுந்தாயே
அவனியொடும் விசும்பல்ஆயிர த்தினெட்டு
அண்டம் இருநூத்தி இருவத்தினாலும்
புவனம்உள உயர்த்துகையும் வர்க்க ணக்கும்
புனலளவும் நிறங்குறியும் பொய் மெய்யாவும்
கெவுனம்தால் கயரத்தானால் சாஸ்திரத்தால்
கெவுனஞ் செய்யாது உரைத்திடுவேன்கேளாய்பாங்கி.

## வசனம்

அகோ வாருமம்மா தாயே உடாங்கனையே கனாவிலே வந்தவனுடைய ரூபலாவண்ணியத்தையும் சரிவரச் சொல்லவில்லை. மேலும் அவன்தந்த இஷ்டத்தை யாகிலும் சொல்லுமென்று கேட்டால் அதுவும் சொல்ல முடியாது என்று சொல்லுகிறாய். ஆனால், நான் இந்த ஈரேழுபதினாலு லோகம், ஆயிரத்தெட்டு அண்டம் இருபத்திநாலு புவனமதினனுடைய அகலமும் உயரமும் அழகும் இதிலே வாழப்படாநின்ற சீவசெந்துக்களுடைய துகையும் மற்றும் உண்டானமலைகழிவு இவ்வளவென்று புலப்படும் மரந்செடிகள் இவ்வளவென்று செலம் இவ்வளவென்று நிறங்களும் குறியும் ஆயுசும் இவ்வள வென்று பொய் இவ்வளவென்று மெய்இவ்வளவென்றும் நான்கில் நேரம் யோசனை பண்ணாமலும் கயிற்றுனாலே அளந்து பாராமலும் சாஸ்திரங்களாலே சோதியாமலும் என்வாயினாலே நிமிஷமாத்திரத்தில் சொல்லுகிறேன் என் சாமர்த்தியம் பாருமம்மா தாயே.

இப்படிச் சொன்ன சித்திரலேகையைப் பார்த்து உடாங்கனை சொல்லுகிற விதம் எப்படியென்றால் :-

அகோவரும் பெண்ணே இந்திரசாலப் பாங்கி நீ கெட்டுப்போன பாலை நல்ல பாலாகச் செய்வாய் கெட்டிடாத காரியத்தைக் கெட்டுப் போகச் செய்வாய். இந்த லோகாதிலோகங்களின் ஆழமும் நீளமும் சொல்லுவாய். மெய்யைப் பொய் பண்ணுவாய் பொய்யை மெய் ப்ண்ணுவாய் ஆனதினாலே உனக்குப் பிரதிக்கு இணை

சொல்லி வாயடை வாயடைக்கிறதற்கு என்னால் ஆகுமோ ஆகாது. ஆனதினாலே நீயட்டி சொல்லாமல் கேட்டதே யானால் நான் தெரிந்தமட்டுந் சொல்லுகிறேனடி பாங்கி.

அப்படியே உன்மனம் போனபடியாகட்டும் சொல்லி வாருமம்மா தாயே...

## 45. சிங்காரப் பத்தியம்

நவரற்றின மகுடம்இலங்க நாமம்இலங்க
சுவேலையுள் ஆன்றன்கையில் கவசகுண்டலம்இலங்க
முன்னூறும்இலங்க கனககாப்பொடு
கொலுசுகம்இலங்க
புவிபுகழு மரைஞான் இலங்க வாளும்இலங்க
பொன்கச்சுஇலங்க பொற்சிலங்குஇலங்க
குவிமுலை மடந்தையர்கள் புகழ்சதங்கை இலங்க
கொத்து வெண்டைய மொடு கொலுசு இலங்க
நந்து பாற்கடலின் எழுநாரி புகழு சந்திரஒரு
வெனுமதன தளிரு போலும்
இந்த விதமாய் கனவில் வந்தானாம்
வந்துநின்றனர் இந்துவதன சகியே

## வசனம்

அகோ கேளும் பெண்ணே இந்திரசாலப் பாங்கி நவரற்றினக்கிரிடந்துலங்க ஆடைஆபரணங்கள் அலங்க சகல வேடிக்கை வினோதனாக லட்சுமிதேவியும் புகழத் தக்கதாக சொற்னப்பதுமைப் போலவும் மன்மத தளிரு

போலவும் என்னுடைய பக்கத்திலே வந்து நின்றானடி சித்திரலேகா.

வந்து நின்றானே நின்றதும் ஒன்றும் பேசாமல் போய்விட்டானோ பின்னும் என்னாகிலும் கல்லல் செய் தானோ எனக்கு விவரமாகச் சொல்லும்மா தாயே.

அகோ கேளும் பெண்ணே இந்திரசாலப் பாங்கியே என்னுடைய கனாவிலே வந்தபுண்ணிய புருஷன் என்தலை மாட்டின் ஓரமாக வந்து சம்மணங்கால் கூட்டியிருந்துக் கொண்டான் பாங்கி சித்திரலேகா.

இருந்து கொண்டது உன்னுடனே பேசினானோ பேசவில்லையோ என்னபண்ணினானோ எனக்கு விமர மாகச் சொல்லுமம்மா தாயே.

அப்படியே சொல்லுகிறேன் கேளும் பெண்ணே சித்திரலேகா.

## 46. தரு

எடுமுன் தலையைத் தொட்டான் தாங்கிஸ்தனங்கள்
தொட்டும் இருகையிலுங் கும்பிட்டான் பாங்கி
கிடுகிடென்றுங் கைவிடுவிடென்றுபின்னும்
அடுமை பதறில் உன்கை விடுவதில்லை எனவே
(யெடுமுன்தலையைத் தொட்டான்)

கள்ளன் என்றென்னை வெய்தாலும் இந்த
பட்டணத்தில் உள்ளோர் எல்லாங்
கூட்டஞ்செய்தாலும்

என்னை பிடித்து

கட்டினாலும் என்வெட்டினாலும் நாள்(ள்)
எட்டதாகில் உனைவிட்டு வாழ்கனே
(எடுமுன் தலையைத் தொட்டான் தாங்கி)
மாதேஎன் பட்டத்து தேவி உந்தன்
மீதே நான் சூதே செய்தாலே
வெகுபாவிதானென்று
சத்திய வார்த்தை யுகித வெகு
நேர்த்திய தாய்ச் சொல்லி
பார்த்திபன்விரகமது தீர்த்திடலா -
(எடுமுன் தலையைத்)
மோசமென்பதுதான் கைக்கொள்ளாதே வயைவந்த
ராச யோகத்தினைத் தள்ளாதே
என்றுதான் சொல்லி நீங்கி எனைக்கூடி
மருவ வெருக்கோடி புண்ணியம் உனைத்தேடி
வருகுதயென்
(எடுமுன் தலையைத் தொட்டான் தாங்கி ஸ்தனங்கள்
தொட்டு இருகையிலுங் கும்பிட்டான் பாங்கி)

## வசனம்

ஆ.ஆ. கேளும் பெண்ணே இந்திரசாலப் பாங்கி சகலமுந் தெரிந்தும் ஒன்றுந் தெரியாதவன் போல என்தலை மாட்டில் இருந்துக்கொண்டு பெண்ணே உன்னாசையார நம்மள் நம்பிவந்தேன் நீ சற்றும் என்னுடனே அட்டி பண்ணாமல் சேறலாம் என்றும் நீ அட்டி செய்தாலும் என்னை நீ திட்டினாலும் கட்டினாலும் வெட்டினாலும் என்னுடைய பிராணன்போனாலும்

உன்தோள் சேராமல் நான் போகமாட்டேன் என்று மிகவும் சோர்ந்த வார்த்தைகள் பேசினது கைகளாலே எடுமுன் தலையைத் தொட்டான்.

அப்பிரஸ்தனங்களை மெள்ளத்தொட்டுப் பார்த்தானடி பெண்ணே சித்திரலேகா.

ஆ.ஆ. நல்ல காரியம் ஆச்சுது உலகத்திலே சிலவு சொல்லுவார்கள் அதெப்படியென்றால் ஈபுகுத இடங் கொடுத்தால் எருமைக்கிடாப் புகுதயிடம் பண்ணுவார்கள்.

சரி ஒண்ணுக்கிருக்கப் போகக் காணிகொடுத்தால் வீடுவாசலெல்லாம் நம்மிடதென்பார்க்ள்... சரி பயித்தியக் கார ராசாவைக் கண்டால் பட்டணமெல்லாம் நம்மிட தென்பார்கள். சரி போய்ச்சாகுதென்று திண்ணையிடங் கொடுத்தால் பெண்டுபிள்ளை எல்லாம் நம்மிட தென்பார்கள். சரி பல்லசைஞ்சிப் பழமை பேசினால் பறையனுமதியானாஞ் - சரி ஏழையென்று தந்திட்டால் எலியும் பூனைமேல் ஏறுமாம். சரி கூறுகெட்ட மணியக் காரனைக் கண்டால் குடிகள் தலைமேல் ஏறுவார்களாம் - சரி சினமய்ந்து கேட்டால் திருடருக்கு கொண்டாட்ட மாம். அடக்கமில்லாத பண்ணாள் அடியானால் ஆடு மேய்க்கியும் ஏளிதம் பண்ணுவானாம் சரி மவுனம் இல்லாத வேசியைக் கண்டால் மாடு மேய்க்கியும் கேலி பண்ணு வானாம். அப்படிப் போலப் பேசாத படிக்கு கோபஞ் செய்யாதபடிக்கு கைகால் அலுங்காத படிக்கு லவண்டை கடியாத படிக்கு கிடுகிடு அஞ்சாத படிக்கு நீ நல்லவள் போலே இருந்தாள் தலையைத் தொட்டுப்பார்ப்பான். ஸ்தனங்களையும் தொட்டுப் பார்ப்பான். இன்னும் வேறே

வேர்காரியங்களுக்கு இடம் பண்ணுவான். அதுதான் ஏன் சொல்லவேணும் அவன் மனசுக்குச் சரிப் போனபடி அது ஆகாதென்று தட்டிசொல்லப்போனால் அதிக கோபம் வருகிறது. அதல்லாமலும் வேம்பு சாதிக்கிறவர்களுக்கு வேம்பு ருசிக்கும். சாறுக்கு ஒருத்தர் சொன்னாப்போலே நடக்கிறதா நடக்கிறதில்லை. மேலும் அந்த ராசகுமாரன் தலையைத் தொட்டானே அப்போ நீ பேசாமல் இருக்கிற தாகக் காட்டினதால் தானே ஸ்தனங்களையும் தொட்டான். தொட்டதும் அந்த மட்டோடே போய்விட்டானோ பின்னும் எண்ணாமலும் கள்ளதனத்துக்கிட்ட....

## 47. சிங்காரபத்தியம்

அஞ்சல் என்றார்களைக் காப்பவர் மனது போலே
அபயந்தந்தும் ஒன்றாக்கி என்னாசை தேடி
வஞ்சியே நான்இங்கே வந்திட்டனே என்னை
மருவு மென்றே சரச வார்த்தை பேசி
கொஞ்சிக்கிள்ளை முதுகை எனவும் வாரெனவும் இரு
கொங்கைகள் குழைந்திடக் கூட்டி நீவி
நெஞ்சிமீதினில் நெஞ்சும் ஒன்றாக்கி இரு
தாளை நிட்டென்கான் தாளை நீட்டிடாமல்
அகத்தினில் எனக்கு வெட்க மானத்தனமாகியே
முகத்தினை மேலுக் கெடாமலே மூடிகவிழ்ந்திட
நிகத்தில் என்னாளை தாக்கி இடையை நெருக்கி
எந்தனை
நகைத்திடக் கோளாறுகள் சொல்லி தானும்
நகைத்தனன் நமது பாங்கியே.

## 48. தரு

சிரித்தான் சகியே கனகசித்திர வினோதனே
செகச்சால தொழில் கற்றோன் என்பிராணநாதனே
குரித்தான் உரைத்தான் இரண்டு கொங்கைக் குடத்தின்
அவ நிடையானதை
இருக்கிக் கட்டியிழுத்து என்மடியின் மீதிருத்திக்
கொண்டு
நான் சொன்ன வார்த்தைக் கெல்லாம் பதில்பேசும் படியாக
செய்வித்து ஊரும்பேரும் தாய் தந்தைபேரும்
சொல்லச்சொல்லிக் கேட்ப்பான். அவன்
சொல்லாதபோனால் - அவனைக் கன்னங்
கன்னமாய் அறைந்து அவனை ரொம்பவும்
பயப்படுத்தி என் கையாளாய் செய்வித்து
அப்பாலே உன்னுடைய அரண்மனைக்குக் காவல்
ஆளாய் செய்வித்து போடுவேனம்மா தாயே
மேலும் நீயானதினாலே விட்டுவிட்டாயானால்
பிராணன் போனாலும் விடுவேனோ ஒருக்காலும்
விடமாட்டேனம்மா தாயே.

## வசனம்

இப்படிச் சொன்ன சித்திரலேகையைப் பார்த்து உடாங்கனை சொல்லப்பட்ட சோபித மார்க்கம் எப்படி யென்றால் :-

## 49. தரு

மதிமோசம் போனேனடி - சகியே நான்
மாபாவி ஆனேனடி
மதமச்சரத் தொழிலால் மிகுந்தோனை
சதுர்உபாயத்தொழிலால்
அவனை அழைக்காமலும் வாவென்று அழைக்காமலும்
கூடிப் பிழைக்காமலும் வாழ்வுசேவிக்காமலும் - நானே
(மதி மோசம்)

மின்னு நற்பொன்னாலே - துலங்கிய
பின்னற்சடை தன்னாலே
கைகாலும் வெட்டாமலும் அதனால் கட்டாமலும்
தலைமேல் குட்டாமலும் தலையை
வெட்டாமலும் - நானே
(மதிமோசம்)

பேசாமல் போனவனைப் பதர்என்றுங் கூசாமல்
அவனையெட்டி
பிடிக்காமலும் கட்டியடிக்காமலும்
எலும்பை ஒடிக்காமலும் - இமை
(மதிமோசம்)

ஓட்டமெடுத்த போதே அந்தகடினம் நாட்டந்திறந்து
மாது கூடவே ஓடாமலும் மலர்சூடாமலும்
விளையாடாமலும் தினங்கூடாமலும் நானே.
மதிமோசம் போனேனடிசகியே... நான்
மாபாவி ஆனேனடி.

## வசனம்

அகோ வாரும் பெண்ணே சித்திரலேகா. நான் நல்ல சமய காலத்திலே மதிமோசம் போனேனே. சித்திரலேகா இந்திரசாலக் கள்ளன் எந்தத் தடத்திலே போனானோ தெரியவில்லையே சித்திரலேகா. சரீரம் ஆனது தண்ணீரை நீங்கின தாமரைப் போலே தத்தளிக்குதே சித்திரலேகா. உள்ளமானது ஓலையில் இட்ட மெழுகுபோலே உருகுதே சித்திரலேகா. மாயமாய்ப் போனவனை மறப்பம் என்றாலும் மறக்காமலும் மதிதடுமாறுதே சித்திரலேகா. இனியென்ன செய்வேன் பெண்ணே சித்திரலேகா.

## 50. விருத்தம்

ஆயிரங் கையான் பெற்ற அருந்தவப்பலனே கேளாய்
காயமே இளைத்து நீங்காககாதலைக் கருத்தில் வைத்து
வாயுமேயு லர்ந்து பேசும் வார்த்தைக் கோணுவதும் பார்த்தால்
பேயதே உன்னைப்பற்றும் பிசகுபோல் காணுதம்மா

## வசனம்

அகோ வாருமம்மா தாயே சிங்காரப் பெண்களின் தோற்ற அன்னமே. உன்னுடைய வச்சிரசரீரமானது வாடிப்போனதும் சந்திரமுகக் காந்தி தணிந்து போனதும் கூந்தல் வரம்பு குலைந்து போனதும் வடவாமுகாக்கினி பட்ட மெழுகுபோலே மனது உருகிறது. அளவில்லாத ஆசையை அகத்திலே வைப்பதும் வஞ்சிக் கொடிபோல வாடி உலர்ந்துபோவதும் வார்த்தைகள் பேசினால்

வாய்க்குளறிப் போவதும் யோசனைசெய்து பார்த்தால் உன்னைப் பேய் அனுசரித்த வரலாறுபோலே காணுதம்மா தாயே.

இப்படிச் சொன்ன சித்திரலேகையைப் பார்த்து உடாங்கனை சொல்லுகிற மார்க்கம் எப்படியென்றால் :-

ஆ. ஆ. கேளும் பெண்ணே இந்திரசாலப் பாங்கி நல்ல வார்த்தைச் சொல்ல வந்தாய். விளக்குச் சுடர்மேல் ஈ ஒட்டுமோ! வெங்கலத்தகட்டை எறும்புகள் உண்ணுமா? நெருப்பைப் புழு பத்துமா (பற்றுமா)? நெல் உமியைக் கறையான் அரிக்குமா? நாக சர்பங் கருடனைத் தீண்டுமா?

நச்சுக்கட்டியை நாய் தொடுமா? நியாயம் அப்படி யிருக்க நீ யோசனை செய்யாமல் என்னை பேய் அனுசரித்த மார்க்கம் என்று சொல்லலாமோ, பாங்கி சித்திரலேகா. நான் கற்புள்ள பெண்ணல்லவா சித்திரலேகா.

ஆ.ஆ. கேளுமம்மா தாயே. உடாங்கனையே ஒரு சந்திப்டானை என்றும் உகுபூதார் நார் கேழ்க்க எப்படி இருக்குதென்றால பாலிலே பழம்நழுவி விழுந்தாப் போலும் செந்தேனிலே சீனிச்சர்க்கரை தவறி விழுந்தாப் போலும் பசுவின் நெய்யிலே பனைவெல்லந்தவறி விழுந்தாய் போலும், கரும்புச் சாற்றிலே கற்கண்டு தவறி விழுந்தாய் போலும் ஆச்சுது. அப்பால் நடந்த வரலாறு சொல்லுமம்மா தாயே.

அடிவாடி சித்திரலேகா. ஊமை மன்ன ஆனாப்போலே கனாவுங்கண்டால் ஒருத்தரோடேயும் சொல்லவேண்டா மென்பது போலாச்சுது என் பிழைப்பு.

அகோ வாருமம்மா தாயே. நீ இப்படிச் சொல்ல வேண்டியது என்ன அந்த ராசகுமாரன் கலவிச் சம்பிரதாய முடிந்த பிற்பாடு உன் சரீரமெல்லாம் நோக அடித்தானோ? போவோம் வாடியென்று கையைப் பிடித்து இழுத்தானோ? உடமைகளைப் பிடுங்கினானோ, சேலையை உரிந்து கிழித்தானோ? உன்னை மிகவுந் தூஷ்னமாக வைதானோ. என்ன அட்டாதுட்டிகள் பண்ணினானோ நீமதி மயங்காமல் சொல்லுமம்மா தாயே.

அகோ கேளும் பெண்ணே சித்திரலேகா, எத்தனை அடி அடித்தாலும் இணை உருகிப் போகுது உடம்பு. அதுகளினாலே ஆகவேண்டியது என்ன, மேலும் உடம் பானது தூள்தூளாய் நெறிந்துப்போனாலும் திடப்படுத்திக் கொள்ளலாம்.

உடையை உற்பத்தி கினிகின் ஆபரணங்கள் சீமைப்பண்டு பண்டாதிகள் போனபோதிலும் என் மனங்கலங்காது. இப்போது என் மனந்தவிக்குதே நான் என்ன செய்வேன் பெண்ணே சித்திரலேகா.

## 57. தரு : மோகனராகம்

செகராசராசசிரோ ரத்தினமென்று
திரிலோக ராசசெய சிங்க மென்று
மகராசராச மதராசன் என்று
மணிமார் போடணைத்து என்மன மகிழ்ந்து
கண்திறந்திடமாய மாய்ப் போனான்
இப்படி உண்டோ மகிபால னானமாயதந்திர

உபாயமுடனே ஊரு சம்பிரதாயம் உடனே சீக்கிரம்
வாயுவேகாதாக மாயமாய்ப் போனான்
மடலானதற்குள் மனமானது அகல (செக)
அம்மலரான தொருவர் மதியாது போல்என்
உடலானதுக்கு ஒரு காசு விலை
உதவமால் மனதுமிக உருக்கி ஆகை பெருக்கி
ஓடிப்போ னானே அவனும் நல்ல உருமாறித்தானே
ஓடிப்போன வன்முகம் வாடிச் சோம்புவதுண்டோ
வாடிப் போனதல்லாமல் பேடிப்பயலைப் போலே
(ஓடிப்போனானே)
இந்திராணி இந்திரன்என லீலை புரியம்என்
பிராணநாதன் என்றெண்ணியே
முந்தாணியதனில் முகம் வேர்வை நீக்கிஎன்
முகமீது கொஞ்சி முத்தம் வைத்தணைத்து
எந்தன் மோகந்தணித்தானே கண்
திறக்குமுன் மோசஞ் செய்தானே
மோகமது மிகுந்து திரேகமது கணந்து
யேகமாய் மதன கொக்கோக விசும் தாகயென
(மோகந்தீர்த்தானே)
உடலோடும்உடலை ஒயிலோடு அணைத்து
உயிரோடும்உயிரை உரலோடு இணைத்து
இடையோடுஇடையை இதமோடு இணைத்து
இதழ்நீரைஊட்டி ஏகபோகஞ் செய்துஎன்னை
ஏசிப் போட்டானே அவன் வெகுநாளைக்கு
இருக்க மாட்டானே
ஏசிப் போடாதே என்று கூத்துடனே சொல்ல

சீச்சீ உனக்கடுத்த பேச்சல்ல என்று சொல்லி
ஏசிப் போட்டானே - அவன் வெகுநாளைக்கு
இருக்க மாட்டானே.

## வசனம்

ஆ.ஆ. கேளும் பெண்ணே சித்திரலேகா கனாவிலே வந்து என்னைச் சேர்ந்துபோன புண்ணிய புருஷனை நல்ல குணசாலியென்றும் என் ஸ்தனபாரங்களின் மீதிலே சேர்த்தணைத்துக் கொண்டு ஈசுவரி சொன்னவார்த்தை பலிதமாச்சுது என்று என்னுடைய தவசு ஈடேறிச்சுது என்று எனக்குயினிமேல் ஒரு குறைச்சலுமில்லை.

**சித்திரலேகை கதை முற்றும்**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

## அருஞ்சொற்பொருள் விளக்கம்

| | |
|---|---|
| அனகன் | - கடவுள் |
| அநிருத்தன் | - நாராயணன் வியூகவதாரத்தில் ஒன்று |
| ஆயாசந்தனை | - களைப்பு |
| இஷ்டன் | - வச்சிரனுக்கு குமரன் |
| இரணியவடங்கள் | - பொன்வடங்கள் |
| இரு | - அதிதி தேஷக்கொடு பெயர் |
| உஷை | - பாணாசுரன் பெண் |
| ககுந்து | - திமில் |
| கட்டழகு | - பேரழமு |
| கபடி | - கபட முடையவள் |
| கும்பா | - உண்கலம் |
| கோகர்னம் | - துளுவ நாட்டிலுள்ள ஒரு சிவபதி, ஒரு வித்தை. |
| சமு | - 729 யானை, 729 தேர், 2170 குதிரை, 3645 காலள் கொண்ட சேனை |
| சய | - 28 ஆவது ஆண்டு கழி |
| சரசசல்லாபம் | - காதல் பேச்சு |
| சரசம் | - காமசேட்டை |
| சல்லடம் | - குறுகிய கால்சட்டை |

| | |
|---|---|
| சல்லுதல் | - நீர்தெளித்தல் |
| சிதர் | - மழைத்துளி, பூந்தாது |
| சுரராசன் | - தேவராசன் |
| சுராரிடம் | - தேவலோகம் |
| சொர்ன்ன | - பொன் |
| சொரூபம் | - இயற்கைத்தன்மை, அழகு |
| கோபம் | - இரக்கம் |
| தடங்கடல் | - பெரியகடல் |
| தயாபரிலோகநாயகி | - அருள் உள்ள கடவுள் |
| தர்ம | - அச்சம் |
| தருவினங்கள் | - கற்பகமரம் |
| திலகன் | - திலகன் |
| துற்சனன் | - கீழ்மகன் |
| தேற்றவு | - தேற்றம் |
| நற்றம் | - நற்குணம் |
| நன்னுதல் | - நன்னெற்றியுடையவள் |
| நனனி | - நெருக்கம் |
| பகரம் | - அழகு |
| பாரணம் | - திருப்தி |
| பாரதனம் | - முலை |
| பித்தம் | - மயக்கம் |

| | |
|---|---|
| பிராணநாயகன் | - கணவன் |
| பூதலம் | - பூமி |
| மித்திர | - நட்பு |
| மூழி | - சோறு |
| மெட்டு | - கௌரவம். பாட்டின் இராப்போக்கு |
| மெட்டுதல் | - காலால் தாங்குதல் |
| மேட்டி | - உதவி வேலைக்காரன் |
| மோடி | - பிணக்கு |
| மோரை | - மோவாய் |
| மோறை | - முரட்டுத்தனம் |
| வசம் | - சைவகம் |
| விரகவிதனம் | - காமநோய் |
| லீலை | - பதமுன் தேவி (இவள் சரஸ்வதியை வேண்டி ஞானமடைந்து புருஷனுடன் நற்பதமடைந்தாள்) |

## சொல்லடைவு

அங்கை
அசுரர்
அட்டிகை
அஸ்திரங்கள்
அண்டம்
அதரக்கனி
அதிகலாபம்
அவனி
அரைஞான்
ஆதிசேடன்
இச்சை
இந்திரன்
இந்திராணி
இந்துவதனம்
இப்பி
ஈஸ்வரி
உடுக்கை
ககனவிஞ்சை
கடபம்
கயிலை
கனா
கழுகு
காமம்
காயம்
கும்பாய்தனங்கள்
குயில்
கோட்டி
சகி
சந்திரன்
சலுதாய்
சற்குணம்
சுரசமதில்
சுதி
செககாலம்
செங்கதிர்
சொற்பனம்
சோபிதம்
சோதி
தாதிப்பெண்
திங்கள்
திலகன்
தென்றல்
தேன்
தோஷம்
நயனம்
நிந்தை
நித்திரை
நல்லோர்
பகடை
கன்னிர்

பாங்கி
பாணம்
பிராணன்
பிராணநாயகா
புகழ்
புட்பம்
புரக்கணைகள்
பூ
பூசணிக்காய்
மகுடம்
மத
மந்திரி
மலர்
மன்னன்
மாகாசவாணி

மாது
மித்திர
முகில்
முலை
மெய்
மேனி
மோடி
வஞ்சி
வதுவை
வள்ளைக்கொடி
வாணாசூரன்
விழிகள்
வீணை
ராஜகுமாரன்
ரூபலா வண்ணியம்

# செய்யுள் முதற் குறிப்பகராதி


| வ.எண். | பா.எண். | வ.எண். | பா.எண். |
|---|---|---|---|
| அஞ்சலென்றார் | 47 | சூட்சசகி | 32 |
| அஷ்டதிக் | 42 | செகராச | 51 |
| அன்னமே | 34 | சொல்லமுடியா | 43 |
| அன்னையே | 40 | தாங்கலால் | 25 |
| ஆயிரங்கையான் | 50 | திட்டிக்கழித்தனள் | 31 |
| இந்தவித | 23 | தூங்கையில் | 22 |
| இந்திரனே | 7 | தேட்டமாய் | 27 |
| இதுஎவர் | 19 | தோட்டமாய் | 2 |
| இப்பி சாஸ்திரத்தின் | 38 | நவரத்தின | 45 |
| உத்தம வடிவா | 24 | பஞ்சதந்திர | 15 |
| எடுமுன் | 46 | பலபல | 30 |
| எந்தவிதம் | 36 | பழுத்தமுழு | 35 |
| எப்பநான் | 21 | பார்ப்பதி | 18 |
| என்னகாரணமிது | 3 | மகமேரு | 14 |
| என்னதிகரூபமோ | 4 | மகராசனால் | 41 |
| என்பிராணநாதா | 10 | மந்திரதந்தி | 28 |
| என்னமாய் | 33 | மதிமோசம் | 49 |
| என்னென்ன | 17 | மன்னனே | 11 |
| கட்டியணைத்தனளே | 1 | மனதே | 5 |
| கவின் | 44 | மாவலிவான | 37 |
| கனவில் | 12 | மேதினி | 6 |
| கூசாமல் | 16 | மோடி | 8 |
| சகிமாரே | 29 | மோடிசெய்யாமல் | 9 |
| சத்தியாமளைமாவின் | 20 | வந்தனள் | 26 |
| சாய் விழிகள் | 13 | வந்தான் | 39 |
| சிரித்தான் | 48 | | |

## பயன்பட்ட நூல்கள்


1. சித்திரலேகைக் கதை (ஓலை)
அ.கீ.சு.நூ. சென்னை - 5

2. சித்திரலேகைக் கதை (தாள்)
அ.கீ.சு.நூ. சென்னை - 5

3. செந்தமிழ் அகராதி
- ந.சி. கந்தையா

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

4. தமிழ்ப் பேரகராதி
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 5

5. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
ஏ.என். பெருமாள்

6. நீலியட்சகானம்
பூ. சுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்)
ஆசியவியல் ஆய்வு நிறுவனம்,
சென்னை - 41.

7. ஸ்ரீமத் பாகவதம்
குடலங்குடி ஹவுஸ், தி.நகர்,
சென்னை - 17


